

# மொழி பெயர்க்கப்படாத
# மௌனம்



தமிழ்நெஞ்சம்

ரிம்ஸா டீன்

# மொழி பெயர்க்கப்படாத மௌனம்

## ரிம்லா டீன்

**தமிழ்நெஞ்சம்**
59, rue des Entrechats , 95800 Cergy - France

நூல் விபரங்கள்


நூல் தலைப்பு : மொழிபெயர்க்கப்படாத மௌனம்
mozipeyarkkappadaatha maunam

நூல் வகை : கவிதைகள்
முதல் பதிப்பு : ஜனவரி 2019


நூலாசிரியர் © : ரிம்ஸா டீன்
Rimza Deen
92 / D2, Sangaraja mawatta,
Hunupitiya, Wattala., Sri lanka.

அலைபேசி : 0777555946



பதிப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்

வடிவமைப்பு &
வெளியீடு : Tamilnenjam
59, rue des Entrechats
95800 Cergy - France

மின்னஞ்சல் : editor@tamilnenjam.com

பக்கங்கள் : 112
அளவு : A5 (148 x 210 mm)
விலை : 350 Sri Lanka Rupees (LNR)

ISBN : 978-955-71248-0-3



# அணிந்துரை

'மொழி பெயர்க்கப் படாத மௌனம்'

இலங்கையின் தலைநகரில் வாழ்கின்ற ரிம்ஷா டீன் வழங்கியிருக்கின்ற புதுக் கவிதைத் தொகுதி.

புதுக்கவிதையைப் புரிந்து கொண்டு எழுதுபவர்களும், அதுபற்றி எதுவும் அறியாமல் உரைநடையையே வரிமடித்து புதுக்கவிதையெனநினைத்துக்கொண்டுஎழுதுபவர்களுமாக இருசாரார் புதுக்கவிதை உலகில் நிறைந்திருக்கின்றனர்.

ஊடகங்களின் பெருக்கம், சமூக வலைத்தளங்கள் தருகின்ற வாய்ப்பு, புதுக்கவிதை எழுதுபவர்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்பவை புதுக்கவிதைகளின் அதிகரித்த வரவிற்குக் காரணமாக அமைகின்றன.

'இலக்கணச் செங்கோல், எதுகைப் பல்லக்கு.., இவையெதுவுமில்லாத கருத்துக்கள் தம்மைத்தாமே ஆளக் கற்றுக் கொண்ட மக்களாட்சி முறையே புதுக்கவிதை' என்று மு. மேத்தா சொல்லி இருக்கின்ற போதிலும் புதுக் கவிதையின் தந்தையாகப் போற்றப்படுகின்ற பாரதியார், 'சுவைபுதிது,

பொருள் புதிது, வளம் புதிது,சொல் புதிது சோதிமிகு நவகவிதை, எந்நாளும் அழியாத மஹாகவிதை' என்று கூறுவார். இதனை ஏற்றுக் கொண்டு சுவை,பொருள், வளம், சொல் என்பவை புதிதாக எழுதித் தருகின்ற படைப்பாளிகள் மிகச்சிலரே.

அச்சிலருள் ஒருவராக "மொழி பெயர்க்கப்படாத மௌனம்" மூலம் தன்னை அடையாளப் படுத்துகின்றார் ரிம்ஷா டீன்.

நான் கவிஞரல்ல என்று ஒரு கவிதை.

"ஆழமான கருத்தை அழகாகச் சொல்லிவிட
பல சொல்லாடல்களைத் தேடி அலைகிறேன்.
முழுமைக்காணா என் கவிதைகளுக்கு
முற்றுப்புள்ளி வைத்திடவே
பரீட்சையாய் எழுதுகிறேன்
தேடலின் முடிவாக
புதுமொழி கிடைத்தால் நானும்
எழுதி முடித்து விடுவேன்
என் புதுக்கவிதைகளை"

என்று புதிய சொல்லாடல்களை புதிய கவிதை மொழியை தேடுகிறார் ரிம்ஷா டீன்.புதுக்கவிதை பற்றிய புரிந்துணர்வும் தன்னடக்கமும் பாரதியாரின் நவகவிதைக் கருத்தோடு ஒத்துப் போகின்ற கவிதைப் பார்வையும் அவருக்கிருப்பதை கண்டு கொள்ள முடிகின்றது.

மன உணர்வுகள், அன்பு, காதல், சுதந்திரம், தாய்மை, உறவுநிலை, தந்தை மகள் பிரிவு, தாய்மகள் பிரிவு மரணம் என்ற பல்வேறு தளங்களில் நின்று கவிதைகள் பேசுகின்றன.

"நீயென்றும் வசந்தமாக வாழவே
நான் உன்னில் அதிகாரம் செலுத்துகிறேன்.

உனக்குப் பயிற்சி அளிக்கிறேன்.
நீ உலகம் போற்றி
ஊர்வலம் வர
உள்ளத்தை உருக்கிப் பிரார்த்திக்கின்றேன்
நீ அறிய மாட்டாய்!
எனக்கு நீயொரு பொருளல்ல
பொக்கிஷம்,»

அன்னையர் அதிகாரம் காட்டுவதாக எண்ணிக் கொள்ளும்பிள்ளைகளுக்குதாயின்உள்ளத்தைபடம்பிடித்துக் காட்டும் உணர்வு பூர்வமான கவிதை தாயுமானவள்.

கவிதைகளுக்குள் ஒருதலைக் காதலும் அழகாக சித்திரிக்கப்படுகின்றது.

"எதுவுமில்லை நீ,
உனக்காக எந்தப் பரிசு பொருளும்
நான் கையளிக்க வில்லை.
என்கையெழுத்தில் ஒரு கடிதமேனும்
நான் உனக்குத் தரவில்லை.
எனினும்-
இன்று வரைக் கூடவே வருகின்றது
என் சுவாசம் கலந்த
உன்வாசம்!"

வித்தியாசமாக எழுதுபவர் ரிம்ஷா என்பதற்கு அவரின் வரிகள் சாட்சியம் தருகின்றன.

"இதுவரைக் கூடவே வருகின்றது
என்சுவாசம் கலந்த உன் வாசம்"

"வீதியோர யாசகனைப் போல
அலைந்து திரிகின்றேன் வரமாக

உன் திருமுகம் காண''

''கரைகளைக் காண ஏங்கும் அலைகளைப் போல்
அதன் நுரைகளைச் சேகரிக்கிறேன்''

''நான் கடந்து வந்தது
வழிகளையல்ல
வலிகளை''

''அத்துமீறிய சுனாமியாய் என்னை
ஆதிக்கம் செலுத்துகின்றாய்»

என்றெல்லாம் இவர் பாடுகின்ற போது புதிய சொல்லாடல்களை உவமை, உருவக, படிம அழகை இரசிக்க முடிகிறது. கவிதை மொழியில் உணர்வுகளைப் படம் பிடிக்க அவருக்குத் தெரிந்திருக்கின்றது.

கவிதை பற்றிய அவருடைய தேடலில் வெற்றி பெற்றவராக கவிதைக்குரிய இறுக்கம், சொற்சிக்கனம் என்பவற்றிலும் கவனம் செலுத்தியவராக மேலும் மேலும் நல்ல படைப்புக்களை அவர் தரவேண்டும். அவருக்கு நமது வாழ்த்துகள்!

அன்புடன்,

பாவேந்தல் பாலமுனை பாறூக்.

14ஏ, பர்ஹானா மன்ஸில்,
பாலமுனை-03
இலங்கை.



# மகிழ்ந்துரை

என்இலங்கைபயணத்தில்முதலில்எனைவரவேற்ற அன்பு தோழியர் ரிம்ஸா டீன். என்னையும் தமிழ்நெஞ்சம் அமின் ஐயாவையும் உபசரித்து, அன்பைக் கொட்டியவிதம் தமிழுக்கும் தமிழனுக்கும் பெருமை சேர்க்கும் பண்பாட்டு உபசரிப்பு அது. அவருடைய கவிதைகளுக்கு மகிழ்ந்துரை வழங்குவதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

மொழிபெயர்க்கப்படாத மௌனம் எனும், தன்னிலை கவிதை ஓர் அற்புதப்படைப்பு. சமூகத்திற்கும் தனக்குமான உறவை, விரிசலை மிக அருமையாக தன் கவிதை வரிகளால் வார்த்திருக்கிறார்.

"கதவருகே வீற்றிருக்கிறேன்
என்னைச் செதுக்கிய சிற்பியின்
நல்வரவுக்காக"

அன்பின் தகப்பனை, அவன் வரவை. எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஒரு பெண்ணின் உணர்வு.இது.

கணவன் உறவு எத்துணை உன்னதமான

உறவு என்பதை... மிக அழுத்தமாகப் பலப்பல கவிதைகளில் எழுதியுள்ளார். அவ்வரிகள் படிப்போர் நெஞ்சில் கணவன் மனைவி உறவின் மேன்மையை நமக்குக் கற்றுத்தரும் பெருவிருந்து எனலாம். அடுத்து, தன் மகளுக்கு எழுதிய கவிதைகள் மனத்தில் ஈரமான நீரொழுக்கை உருவாக்குகின்றது.

''நான் பட்ட ஒரு துளி துன்பமேனும்
உன் பக்கம் நெருங்காமல்
நானே காவல் செய்கிறேன்''

என்று தன் அரிய கவிதையைக் கொடுத்துள்ளார்.

''என் விரல் பேனாகொண்டு
எழுத வைப்பதற்கு ஒரு சந்தர்ப்
பம் கையில் துப்பாக்கித் தந்தால்
ஒட்டுமொத்த வழக்குகளை
துப்பாக்கிக் கொண்டே
சுட்டுத் தள்ளித் தீர்த்து வைப்பேன்''

உண்மையில் ஒரு பெண்ணாக இருந்து மிகுந்த துணிச்சலுடன் பெண்குழந்தைகள் வன்புணர்வுக்கு உள்ளானதை உக்கிரமாக, வலி மிகுந்த வரிகளில் எடுத்துரைக்கின்றார்.

''அன்பிலான அன்பு மட்டுமே
உயிரை விட மேலானது''

எனும்போது நம் அகத்தில் நச்சும் கலந்த அன்பு இருப்பதை உணர்த்துகின்றார். இவர் மேலும் பற்பலக் கவிதைகள் படைத்துத் தமிழன்னைக்கு அணி செய்வாராக...

பேரன்புடன்...

பெண்ணியம் செல்வக்குமாரி,
புதுச்சேரி.




# வாழ்த்துரை

கவிதைகளைக் கட்டுக்கோப்போடு மட்டுமன்றி, அனைவருக்கும் புரியும்படியாக கவி புனைவதில் வல்லமை கொண்டவர் சகோதரி றிம்சா டீன். சமூகம், பெண்ணியம், சமயம் சார்பான கவிதைகளை மட்டுமன்றி காதல் கவிதைகளையும் துணிச்சலோடு தூவிவிடும் தூறலாய் இவரின் கவிதைகள். ஸ்ரீலங்காவின் தலைநகரில் வசித்து வரும் சகோதரி றிம்சா டீன் தனித்துவமான பல கவிதைகளை தன்னகத்தே கொண்ட ஆளுமை மிக்கதோர் பெண் கவிஞர். படித்ததும் பிடித்து விடும் இவரின் கவிதைகள் தூவானமாய் மனதை தூளியிலே ஆட்டிவிடும். இவரின் மொழிபெயர்க்கப்படாத மௌனம் சிறந்த ஆளுமையினையும், சமுதாயத்தின் அக்கறையினையும் அழகாய்ச்சொல்லும்என்பதில்ஐயமில்லை. ரசிக்கும்படியான கவித்தொகுப்பினைத் தரும் சகோதரி றிம்சா டீன் அவர்களின் கலைப்பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

இந்ரன் மங்கேஷ்
இலண்டன்

# தமிழ் எழுச்சி



விலையில்லாத வைரம்போல் மின்னும்,
ஈழத்து விண்ணதில் முழு மதிபோல்,
வீசுகின்ற தென்றலைப்போல்
தீவின் தலைநகராம் கொழும்பில் பிறப்பெடுத்து
அழகு தமிழுக்கு உயிர் தந்து,
அபூர்வ எழுத்துக்களால் தரணி முழுதும்,
தமிழ் இலக்கியம் வளர்க்கும் திருத்தொண்டை
தமிழ் உலகில் தலை நிமிர்ந்து செய்கின்றார்
கவிதாயினி ரிம்ஸா டீன்!
கம்பனும் கவியரசும் கவிதந்த தமிழுலகில்
தமிழ் நுகர்வோர் அனைவருக்கும் அமுதாக
மொழிபெயர்க்கப்படாத மௌனம் தடம்பதிக்க
கலை வளர்க்கும் பணியதனை காலமெல்லாம்
தொடர வேண்டும் தமிழ்நிலத்தில்!
தமிழ் கூறும் நல்லுலகில் வரலாற்றில்
வாகைகள் பலசூடி அறிஞர்கள் போற்ற
சாதனைகள் பல புரிந்து, எம் நாட்டையும்,
தாய் மொழி தமிழையும், பண்பாட்டையும்,
கலாசாரத்தையும் கட்டி அரவணைத்து
மொழிபெயர்க்கப்படாத மௌனம்
அழகிய தொகுப்பாக தமிழ்நெஞ்சம் பதிப்பிக்க
தமிழ்க்கவியுலகில் வலம்வரும்
சகோதரி ரிம்ஸா டீன் அவர்களை
தமிழ்தாயை சாட்சியாக வைத்து வாழ்த்துகிறேன்!

அன்புடன்,

**கலைஜோதி - அப்துல் மஜீத் ஜெஸீம்**
முகாமைத்துவ பணிப்பாளர் தமிழோசை வானொலி,
செய்தி வாசிப்பாளர் வசந்தம் தொலைக்காட்சி.



# பதிப்புரை

"உலகம் முழுவதும் பெண் தன் திறன் சார்ந்து சுயாதீனமாக வளர அனுமதிக்கப்பட்டால் நிறைய, நிறைய அறிவொளி கொண்ட பெண்கள் உருவாவார்கள். நிறைய நிறைய பெண் உள்ளுணர்வுவாதிகள், கவிஞர்கள், ஓவியக்கலைஞர்கள் உருவாவார்கள். அவர்கள் பெண்கள் தரப்பினை மட்டுமல்ல, உலகம் ஒன்றே என்பதால் ஒட்டு மொத்த உலகத்தையும் முன்னேற்றம் பெறச்செய்வார்கள்.

ஆண், பெண் ஆகிய இருவரின் நன்மைக்காகவும் பெண்ணுக்கு ஒவ்வொரு சுதந்திரமும், அவள் தனித் தன்மைக்கான சம உரிமையும் அளிக்கப்படவேண்டும். அவ்வாறு செய்தால் நகைச்சுவை உணர்வு உலகெங்கிலும் பொங்கும். அப்படிப்பட்ட சூழலில் ஒரு ஆணைவிடக் கருணையோடு பெண் புன்னகைப்பாள். ஆனால், அவ்வாறு நடைபெற விடாமல் அவள் ஒடுக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டு, விமர்சிக்கப்படுகிறாள். அவளால் ஒரு புன்னகையை, சிரிப்பை, நகைச்சுவையை வெளிப்படுத்தமுடியும் என்று உங்களால் நம்பமுடியாத அளவுக்கு கடுமையான துயரத்தோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறாள்.

ஆனால்.. அந்த நாள் வெகு தொலைவில் இல்லை, அந்த நிகழ்வு நிகழும்போது ஒட்டுமொத்த உலகமும் மகிழ்ச்சி மயமாக, சிரிப்பு மயமாகி இருக்கும், அப்போது போரைப்பற்றிய பேச்சுக்களும், உலக அளவிலான அரசியல்வாதிகளின் பேச்சுகளும், எதுவுமே தெரிந்திராத முட்டாள் சாமியார்களின் பிரசங்கங்களைக் கடந்து வாழ்வின் மகிழ்ச்சிகரமான பக்கத்தை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் கண்டு கொண்டாடுவார்கள்.'' என்றார் ஓஷோ.

அதை நடைமுறைப்படுத்திக் காட்டுகிறார் பெண் கவிஞரான ரிம்ஸா டீன்.

"பேச்சில் தேனும்
நாக்கிலே நச்சும்
பார்வைக்கு பாலும்
பருகினால் கள்ளுமான
மனித புனிதர்களை
வாசிக்கப் புறப்படுகின்றேன்''

இப்படி மனிதப்புனிதர்களை படிக்கத்துவங்கும் கவிதாயினி ரிம்ஸா டீனின் கவிதைகளை நானும் படிக்கிறேன். அதில் மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

இவர் வாழ்வின் வலிகளை உன்னத கவிதைகளாக்கி நம் முன்னே படையலாக்கியிருக்கின்றார். மேலும், இவருடைய கவிதைகள் சமூகத்தின் அவலங்களைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

''என் அகராதியில்
அன்புக்கும் அரவணைப்புக்கும் நம்பிக்கைக்கும்
இன்னோர் மொழி தேடுகின்றேன்!''

தேடலில் முடிவாக

"புது மொழி கிடைத்தால்
நானும் எழுதி முடித்திடுவேன்
புதுக்கவிதைகளை..."

இப்படியான தேடலிலேயே தனது கவிதைகளை மொழிப்பெயர்க்க முனைந்திருக்கிறார். எளிய முறையில் இனிய நடையில் செல்கிறது கவிதைகள் நூல் முழுதும்.

முதல் நூலே இப்படியென்றால்...அடுத்துத்தரவிருக்கும் நூல்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

மொழிப்பெயர்க்கப்படாத மௌனத்தை இத்தமிழ் சமூகத்துக்கு பதிப்பித்து, ஈந்தளிப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

தமிழ்நெஞ்சம் இதழின் இலங்கை நாட்டின் தூதுவரான பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள், நான் இலங்கை பயணம் மேற்கொண்டபோது செய்த, அன்பான அக்கறையான உபசரிப்பில் கரைந்துப்போனேன். அவருடைய கவிதைகளை வாசிக்கின்றபோது, பல முறை வியந்திருக்கிறேன். அப்பேர்பட்டவர் ரிம்ஸா டீன் அவர்களுக்கு அணிந்துரை வழங்கியிருப்பது இக்கவிதை நூலுக்கு மணிமகுடமாக விளங்குகிறது என்பதைப் பெருமையோடு சொல்கிறேன்.

வாசகர்கள் தங்கள் கருத்துகளை முன் வையுங்கள். நூலாசிரியருக்கு பயனுள்ளதாக அமையும்.

நன்றி!

அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்
ஆசிரியர் 'தமிழ்நெஞ்சம்', பிரான்சு
email: editor@tamilnenjam.com



# என்னுரை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

பெயருக்கும் புகழுக்கும் உரித்தானவன், என்னை படைத்து பரிபாலிக்கும் வல்லவனுக்கே எல்லாப் புகழும்!

மொழிபெயர்க்கப்படாத மௌனம் இது எனது முதல் நூல்.

கவிதையெனும் கடலில் கால் நனைக்க வந்த ரசிகன் நான்.

சிறுபிராயத்தில் எனக்கு பத்திரிகை, சஞ்சிகைகள் படிப்பதில் அலாதிப் பிரியம். அப்படிப் படித்ததில் சிறந்ததை சேகரிக்கும் பழக்கம் தொடர்ந்தது. காலப்போக்கில் இப்படியான வாசிப்புத் தான் என்னை கவிதை எழுதத் தூண்டியது.

நான் ஆரம்பப் பாடசாலையில் சிங்கள மொழியில்தான் பயின்றேன். பிறகு முதலாம் தரம் முதல், மூன்றாம் தரம்

வரை கொழும்பு பாத்திமா கல்லூரியில் தமிழ்ப் பயிலத் துவங்கினேன். அந்த காலத்தில் அ ஆ... என்று எழுதவோ படிக்கவோ தெரியாதிருந்தேன்.

பிறகு ஹுணுபிடிய முஸ்லிம் வித்தியாலயத்தில், சாதாரண தரம் வரை பயின்றேன். ஏழாம் தரம் முதல் சஞ்சிகைகள் படிப்பது பொழுது போக்காக இருந்தது. கவிதை, சிறுகதை, தொடர்கதைகள் கட்டுரை போன்றவற்றை வாசிப்பதில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. அதிலும், குறிப்பாகக் கவிதைகள் படிப்பதில் அதிக ஈடுபாடு வந்தது. அதிகப்படியான இந்த கவிதை வாசிப்பே அதை எழுதியும் பார்க்கலாம் என ஆர்வமாக மாற்றியது. பாடசாலையிலும் பேச்சு போட்டி, பாடல் போட்டி, நாடகம் மாணவர் பன்றம் போன்றவற்றிலும் பங்குபற்றி பரிசு வென்றதும் உண்டு.

பாடசாலை வாழ்க்கையோடு என் இலக்கிய பயணம் சிலகாலம் நிறைவடைந்தது. மீண்டும் மூன்று வருட சமீபக்காலங்களாக திரும்ப என் இலக்கியப்பயணம் தொடர்கிறது.

எதேர்ச்சையாகவே, முகநூல் போன்ற சமூக வலை தளங்களில் போட்டி கவிதை எழுத வாய்ப்பு கிடைத்தது. வெற்றியும் சான்றுகளினாலும் என் வரிகளுக்கு ஒரு வாழ்வு கிடைத்தது எனலாம்.

என் வரிகளை வலிமையாக்கி, என்னைத் திருத்தி, எனக்கு உற்சாகமூட்டி ஊக்குவித்து அதை நூல் வடிவமாக்கி பதிப்பிக்கும் மதிப்புக்குரிய தமிழ்த்திரு தமிழ்ச்செம்மல் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

இந்த நூலுக்காக என்னை யார் என்றே தெரிந்திடாது எனது கவிவரிகளை மட்டுமே படித்து

நல்ல உற்சாகம் தந்த பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் அணிந்துரையின் வாழ்த்துகளால் அகம் மகிழ்ந்தேன். வளர்ந்து வரும் என் போன்றவர்களுக்கு இவர்களைப்போன்ற நல்ல உள்ளங்களினால் வெற்றிப் பாதைகளே தென்படும்.

இது என் முதல் முயற்சி இலக்கிய உலகினில் தேர்ச்சி பெற்ற பல கவிஞர் மத்தியில் நானொரு கடுகுதான்.

வாழ்த்துகள் வழங்கிய நல்லுள்ளங்களைப் போற்றி, இந்நூல் வெளிவர ஒத்துழைப்பை நல்கிய அனைவருக்கும் நன்றி சொல்கிறேன்.

இனி, மொழி பெயர்க்கப்படாத மௌனத்தை வாசித்து உங்கள் குறிப்புகளைக் கூறுங்கள்.

அன்புடன்
ரிம்ஸா டீன்



# மொழி பெயர்க்கப்படாத மௌனம்

# காணிக்கை

ஏழைத்தாய் ஈன்றாள் முவ்விதைகளாய் எங்களை...
கோழைத்தனமின்றியே வாழ வழியும் காட்டினாள்!

பசியோடும் பலர் பசியறியப் படிப்பித்தாள்!
பட்டம் பெறுமளவுப் படிக்கவைக்கா விடினும் நல்ல
பகுத்தறிவோடு வாழப் பழக்கினாள்!

மூன்று முத்துக்களை தன் சொத்தாகவே நினைத்தாள்!
சொந்தங்களுடன் சேர்ந்து வாழ அறிவூட்டினாள் !
இல்லை என்பவருக்கு இருப்பதை கொண்டுதவ
அறிவுரை செய்தாள்! அதன்படி நடக்கவும் வைத்தாள்!

வறுமையிலும் வசந்தமாக வாழ்ந்திடலாமென்ற
வர்ணங்களைக் காண்பித்து வளர்த்தாள்!
விழுந்தாலும் எழுந்து நடந்திடப் பயிற்றுவித்தாள்!

என்றுமே பிணைப்போடும், விட்டுக்கொடுத்து
அன்போடும், நல்ல பண்போடும் உயர்ந்து நின்ற
மூன்று விருட்சங்களால் மகிழ்வில் நிறைந்தாள்!

மூன்று மலர்களையும் மணம் வீசிட
தன் கரம் கொண்டே உழைத்தாள், வெற்றியும் கண்டாள்!
மொட்டுக்கள் மலராகி மலர்ந்திருக்க கண்குளிர்ந்தாள்!

முன்னுதாரணமாக எங்கள் ஒற்றுமையை பிறர் போற்றவே
இன்று பெருமைகொண்டாள் அவளுக்கே இந்நூல்...

# வாசிக்கப்பட வேண்டியவர்கள்

வாசிக்கப்போகின்றேன்
புத்தகங்களில் சொல்லப்படாத
மனித மனங்களை!

வாசித்துப் பார்க்கலாமென புறப்படுகின்றேன்
ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு
தலைப்புடன் பல்வேறு கதையுண்டு
இனி இவர்கள் யார்தான் என
வகை வகையாய் வரிசைப்படுத்தப் போகின்றேன்!

முகத்தின் புன்சிரிப்பும்
அகத்தினில் வஞ்சனையுமான ஒப்பனையில்
உலவும் மனிதர் நல்வவர்களே
என்று மதிமயங்கிய என் கூற்றுப் பிழைகளை
இவர்களை நான் வாசித்தே
சீர் செய்யப்போகின்றேன்!

பேச்சில் தேனையும்
நாக்கிலே நச்சும்
பார்வைக்கு பாலும்
பருகினால் கள்ளுமான
மனிதப் புனிதர்களை
வாசிக்கப் புறப்படுகின்றேன்

நேரத்துக்கு நேரம் மாறிடும்
ஓணான் கூட்டம் போல
நேரம் வந்தால்
தன் சுயரூபத்தை
மாற்றியே போற்றி வாழும்

மனித "மாணிக்கங்களை"
வாசித்தே வாழப்போகின்றேன்!

காரியத்திற்கும், காரணத்திற்கும்
ஒட்டி உறவாடும்
மனித "சீதேவிகளை"
வாசித்தே சுவாசிக்கப் போகின்றேன்!

இனி என்னாலும் இவர்களை வாசிப்பதே
வழக்கமாக்கி கொள்வேன்!
பார்த்தால் புரியாது
பழகினால் தெரியாது
வாசித்தால் மட்டுமே விளங்கிடலாம்
என்ற கருத்தையின்று ஆமோதிக்கின்றேன்!!

# நகரும் நாட்கள்

போகும் பாதைகளின் தடைகளை அறியாமலே
பயணம் தொடர்கின்றேன்.

திசைகளை விரும்பியே
எத்திசையில் பயணிக்கலாமென்றும்தெரியவில்லை.
இந்த பாதைகளில் முன்பு
பயணித்த அனுபவங்களுமில்லை
அதை படித்து தர பாடசாலைகளுமில்லை.

வழி நடுவே வந்துக்கொண்டிருக்கும்
புயல்களையும் மழைத்தூறல்களையும்
ஒரேநேரம் இதமான தென்றலையும் நல்ல பதமான
இடி மின்னல்களையும் கடந்து போக
எத்தனிக்க வேண்டுமோ?

வழியெங்கும் முகமூடிகள்
நிறைந்தே காட்சியளிக்கின்றதே
இளைப்பாறிட ஒரு
இருக்கை இருக்குமோஅறியவில்லை!

ஆயத்தங்களும் எதிர்பார்ப்புகளும் இல்லாமலே
பாதைகள் நீளுகின்றன.
போதுமென நின்றுகொள்ள
இந்த வாகனம் இடையில்
தரித்து நிற்க தரிப்பிடமில்லை!

அதன் ஓட்டத்தில் தானே ஓடிக்கொண்டிருக்க
நாமும் ஏதோ நகரும் நிழல்களைப்போலவே
அசைந்து கொண்டே இருக்கின்றோம்!

# கவிதை எழுதும் நான் கவிஞரல்ல

எழுத்துக்களை கொண்டு
எனை அளந்திட முயலாதீர்கள்.

நானின்னும் எதையும் எழுதி முடித்திடவில்லை.

சொல்ல வந்ததை
இன்னும் முழுமையாக சொல்லவும்
எழுதவும் தெரியாமல் கிறுக்குகிறேன்.

ஆழமான கருத்தை அழகாக சொல்லிட
பல சொல்லாடல்களைத் தேடியே அலைகின்றேன்.

முழுமைக்காணா என் கவிதைகளுக்கு
முற்றுப் புள்ளி வைத்திடவே
பரீட்சையாய் எழுதுகின்றேன்!

என் அகராதியில்
அன்புக்கும் அரவணைப்புக்கும் நம்பிக்கைக்கும்
இன்னோர் மொழி தேடுகின்றேன்!

தேடலில் முடிவாக
புது மொழி கிடைத்தால்
நானும் எழுதி முடித்திடுவேன்
புதுக்கவிதைகளை...

# மாற்றங்கள் மாறாது

உங்களால் கண்ணீரின் உவர்ப்பை மீறி
அதை, ரசித்தே சுவைத்திட முடிகின்றதா?

அடக்கிட முடியாத பெரும் சோகத்தை
கூட்டத்தின் முன்னிலையிலே
சிறு புன்னகையொன்றினால்
கடந்திட முடிகின்றதா?

அனாதையாகி ஆதரவற்று கிடக்கும் நிலையிலும்
அமைதியாக ஆறுதலை மௌனமாக
அரவணைக்க முடிகின்றதா?

கதறி அழுதிட தோன்றும் பொழுதொன்றில்
வாய்விட்டு சிரித்திட முடிகின்றதா?

அற்புதங்கள் கோடி நடக்கும் அன்றாட வாழ்வில்
அரங்கேற்றம் காணாத சலங்கையாகவே
காலமெல்லாம் வீற்றிருக்க முடிகின்றதா?

ராசி பலனே நாளுக்கு நாள் மாறிப்போகையில்
நிலைகோடு மாறமால் உங்கள் நிலையிலே
நீங்கள் மட்டும் மாறிடாமல் இருக்க முடிகின்றதா?

பாராட்டுகளால்மட்டும் இனி எந்த
மாற்றமும் நிகழப் போவதில்லை.

இப்போது சொல்கின்றேன் இனி ஏதுவும்
மாறப்போவதில்லை மாற்றங்கள் மற்றவர்களுக்கே
மாறுதல் மீள் சுழற்சி கண்ட வாழ்க்கையில்
மாற்றங்களும் இனி ஏமாற்றங்களே...

## தாயுமானவள்

கண்டிப்பாகவே இருக்கின்றேன்
நீயே காரணமின்றி கத்துவதாக புகாரிடுகின்றாய்!

நானென்றும உனையென்
மழலையாகவே பார்க்கவில்லை
என்னில் பாதி உயிராகவே உணர்கின்றேன்
இதை நீயறியமாட்டாய் பெண்ணே...

உனக்கான அனுபவம் நான் கடந்த
வயதைவிடவும் சற்று கூடுதலே...
நான் கண்ட தடைகளை தகர்த்தெறிய
தினம் தினம் போராடியே பொழுதானது
வாழ்க்கையெது என தேடலில்
பூச்சியம் தான் விடையானது
இதை நீயறியமாட்டாய் பெண்ணே...

நான் பட்ட ஒருதுளி துன்பமெனும்
உன் பக்கம் நெருங்காமல்
நானே காவல் செய்கின்றேன்.
நான் தவறவிட்ட இன்பங்களை
உனக்காக இன்று அள்ளித் தருகின்றேன்.
என் சுயவிருப்பைச் செலவாக்கி
நீ விரும்பியதை உனக்கு வரவாக தருகின்றேன்!

நீ என்றுமே வசந்தமாக வாழவே
நான் உன்னில் அதிகாரம் செய்கின்றேன்!
இதை நீயறியமாட்டாய் பெண்ணே...

உனையென் கைக்குள் வைத்தே
பாதுகாத்திடுகின்றேன்

உண்மை கொண்டு காலம் கழித்திட
பயிற்சி அளிக்கின்றேன்
இம்மை மறுமை இரண்டுக்கும் நீ
இன்பம் காண உழைக்கின்றேன்!

உன் பாதைகளின் ஒளி வீசவே
நான் திரியாகின்றேன்!
உன் பயணம் சீர்படவே
பாடுபடுகின்றேன்!

நீ உலகம் போற்றி
உயர வலம் வரவே உள்ளத்தை உருக்கி
பிரார்த்தனை செய்கின்றேன்

நீயெனக்கு பொருளல்ல பொக்கிஷமே
இதை நீயறியமாட்டாய் பெண்ணே...

# எதுவுமில்லாத நீ

உனக்காக... எந்தப் பரிசு பொருளேனும்
நான் பரிசளித்ததேயில்லை!

இன்று வரை உனைத்தான் நேசித்தேனென்று
என் வாயால் நான் சொல்லியதும் இல்லை!

என் கையெழுத்திலான ஒரு கடிதமேனும்
நான் உனக்கு எழுதியதில்லை!

மணிக்கணக்கில் பேசியதுமில்லை!
மாதக்கணக்கில் சேர்ந்திருக்க சந்தர்ப்பமிருக்கவில்லை!

எனக்கு பிடித்த பிடிக்காக
உனக்கு பிடித்த பிடிக்காத
எதுவுமே நாம் அறிந்திருக்கவில்லை!

பிரிவையெண்ணி புலம்பியதுமில்லை
பழகினோமென பரவசப்படவுமில்லை!

இருந்தும், இன்று வரை கூடவே வருகின்றது
என் சுவாசம் கலந்த உன் வாசம்
அதை நான் நுகரும் தருணம் உணர்கின்றேன்
எனக்கு எல்லாமே நீயென

காலப்போக்கில் உன்னை காதல் செய்தே
கனவுகளில் கவி பாடிச் செல்கின்றேன்
எதுவுமே நீயறியா வண்ணம்!

# மகா தவறு

ஒரு சகாப்தம் கடந்து
திரும்பி பார்க்கின்றேன்!
நான் தவறவிட்ட இன்பங்களை
துன்பங்களை துணை கொண்டே
விழிநீர் சிந்தியே காலம் கடந்திட்டேன்!

உறவுகளாலும் ஆறுதல் படமால்
அவர்களின் வாய்க்கு நொருக்குத்தீனியாக
நல்ல சீடை முறுக்கானது என் எதிர்காலம்!

மனதுக்கு பட்டதெல்லாம் அவர் பேச
அனுமதிப்பத்திரம் எந்த அரசு வழங்கியதோ?
இவர்களுக்கு நானறியேன்!

என்னில் தங்கியிருக்கும் நிலை வந்தும்
நானும் மடமையில் வீழ்ந்து
என் கடமைகளை செய்திட்டேன்
மனிதன் என்றுமே ஒரே மாதிரியில்லையென...

நல்ல ஏமாற்றம்தான்
காரியங்கள் முடிந்தவுடன்
கைகழுவினாலும் பரவாயில்லை
கண்ணை குத்தி இழிவுபடுத்தி
விடுவார்கள்குருடியென...

அவர்கள் என்றும் நல்லவர்களே
நாம்தான் புரிந்துக்கொள்ளவில்லை

வாழ்க்கைதனை ஒரு வட்டத்துக்குள்
நிறுத்தி வைத்துவிட்டு

இது தான் வாழ்க்கை
இதுதான் இன்பம்
இதுதான் உகலமென கிணற்றுத்
தவளையாகவே இருந்திட்டேன்!

கண்ணுக்கு தெரியாத நன்மைகளை
சேகரித்திட எனை நானே
கழிவுபடுத்தி காவல் செய்தேன்

மனசாட்சிக்கு பயப்பட்டு
மனமேயில்லாத சில மனிதர்களை
இன்றுவரை மன்னித்து போற்றுவது
என் மகா தவறல்லவா?

## வரங்கள்

மாற்றம் ஒன்றேயின்னும் மாறாமல்
மாறி மாறி வரும்
மன ஏக்கத்தின்
தாக்கம் மாறவில்லை!

எடுத்து வைத்திடும் ஒவ்வொரு அடியும்
பாதாள பள்ளத்தாக்கில் வீழ்ந்த பின்னே
ஒரு ஏடாகின்றது

சுலபமாக ஒரு சிரிப்பைக் கூட உதிர்த்திட
இந்த வாழ்க்கை எனக்கு எளிய பாடம் புகட்டவில்லை.

எனக்கென கிடைத்திட்ட பொருளாயினும்
அன்பாயினும் பெரும் போருக்குள் மத்தியில்
ஜெயித்தெடுத்த புதையல்களே...

ஓடிக்கொண்டே சுழலும் காலத்தின்
வேகத்தினை விடவும்
நான் சுமந்த வேதனைகளை சொல்லிட
புதுமொழிதான் வேண்டும்!

பின்தங்கிய வாழ்க்கை பயணத்தின் பாதைகளை
இன்றும் நான் தேடிப்போய் பார்த்தால்
கண்ணீரால் நனைந்த சாலைகளின் ஈரமின்னும்
காயந்திடாமல் இருக்கின்றது.

என்னில் நினைத்து சுவாரசியமடையும்
அளவெனும் ஒரு சுயசரிதையிருக்கவில்லை!

சொல்லி முடித்திட முடியாத
சோகங்கள் மட்டும் வரலாறு படைத்திடும்
ஒரு சொட்டு தேன் தேடிடும் வண்டைப்போல்
எனக்கான இன்பத்தின் தருணம் ஒன்றைக் காணவே
நெடுநாள் போராடவேண்டியதாயிற்று
இந்த சொர்க்க பூமியில்

கஷ்டத்தைக் கூட ரொம்ப இஷ்டமாக
அணைத்துக் கொண்டே செல்வது
எனக்கிங்கே பழகிவிட்டது.

உறவானாலும் என்
உயிர் வாங்கும் வரவானது
செலவானாலும் என்
உணர்வையிழக்கும் அளவு சேதாரமானது!

# ஒரு கையேந்தி

இருப்போர் அறிந்திட மாட்டார்கள்
எங்களின் நிலைகளை...

பெற்றபிள்ளைகளின்
பிறந்த நாளுக்கும் அவர்களின் பெற்றவரின்
இறந்த நாளுக்கும் மட்டுமே
பசியெடுக்கும் எங்கள் வயிறாக...

அன்றொரு நாளுக்கே அன்னதானமும்
ஆகார பானமும் அமர்க்களமாக
அதன் பின் அனாதைகளானோம்...

என்றுமே எமக்கென ஒரு உடலிருக்கு
அதற்குள்ளும் ஒரு உணர்விருக்குமென
எண்ணிப்பார்ப்பவர்கள் யார்...?

பிச்சை பாத்திரம்தான் கையில் ஏந்துகின்றோம்
உங்கள் சொத்தை ஒரு போதும் கேட்கமாட்டோம்
இருப்போர் கொஞ்சம் கருணை செய்யுங்கள்
இயலாமையில் வாழ்வோருக்கு
இயலுமானதைப் பகிர்ந்தளியுங்கள்
உங்கள் இறுதி நாளைக்கும் கொஞ்சம்
சேர்த்து வையுங்கள்
செல்வங்களையல்ல  நன்மைகளை!

## உன் வரவுக்காய்

வீதியோர யாசகனைப் போலவே
அலைந்து திரிகின்றேன் வரமாக
உன் திருமுகம் கண்டிடவே தினம் தினம்
தெருவோரம் வருகின்றேன்!

உன் வரவுக்காக
நானிங்கே செலவாகிப்போகின்றேன்!

பேரிரைச்சல் தரும் கடலோரங்களிலும்
பேரமைதியாய் மௌனங்களை துணைக்கமர்த்தி
புது மொழி பேசுகின்றேன்!

கடலலைகளை
ரசிக்கின்றேன்
கரைகாண ஏங்கும்
அலைகளைப்போல்
அதன் நுரைகளை
சேகரிக்கின்றேன்

காற்றும் கடந்துபோக
நான் கால்கடுக்க
காத்திருக்கின்றேன்
கதவோர திரைச்சீலையாக.

கதவருகே சிலையாகி
வீற்றிருக்கின்றேன்
என்னை செதுக்கிய
சிற்பியின் நல்வரவுக்காக...

# என்னைத் தருவாயா

நீயில்லாத என் பழைய மனசு
உன்னைப்பற்றி எழுதாத என் மேசையில்
பழைய காகிதங்கள்

வாங்கியவுடன்
உன் பெயரின் முதல் எழுத்தை
கிறுக்கத்தோன்றாத ஒரு பேனா!

உன்னைப் பற்றிய நினைவுகளை
மீட்டிப்பார்க்காத காற்றி ல்
அலைகளில் மிதந்து
காதினில் கேட்கும்
பாடல் வரிகள்!

உன்னைப் பற்றியே ஞாபகமூட்டாத
நான் கடந்து போகும் பழைய
நாம் சந்தித்துப்பேசிய
சருகுப் பாதைகள்...

உன் நினைவுள் தோன்றாத
என் தனிமைப் பொழுதுகள்...

உன்னைத் தேடி அலையாத விழிகள்
உன்னை கவியாகவரையாத
என் வரிகள்

உன்னை பார்க்கதோன்றாத
பகல் பொழுது
காதலின் பின் நான்
நிம்மதியாக தூங்கிய ஏதேனும் ஓர் இரவு

உன் சுவாசம் கலக்காத
கொஞ்சம் மூச்சுக் காற்று
இன்னும் இன்னும்
உனை மறந்து
நான் வாழ்வதற்கு
தேவையான நீயில்லாத
ஏகாந்தம்

உனை மறந்த நான் கூட

புதிதாக
வேண்டும்
எனக்கு தருவாயா?

## உயிர் வாங்கும் உறவுகள்

எந்தன் பாதையின் தடங்களை பார்த்து
மயங்கி பின் தொடராதே
நான் கடந்து வந்தது வழிகளையல்ல
வலிகளைத்தான்!

என் புன்னகைகள் கண்டு
நீ ஆனந்தம் அடைந்திடாதே
பொங்கியெழும் கண்ணீர்த் துளிகளை
மறைத்திடவே சிரிக்கின்றேன்!

உறவுகளை நம்பி
என் உணர்வுகளை
துரத்தியே விட்டேன்
யார் நம்பியது
இவர்கள் காட்டுவது
அன்பு அல்ல அநியாயமென்று!

எதிர்பார்ப்பு என்னுள் ஏமாற்றம் தந்ததே
நிறம் மாறும் பச்சோந்தியும்
இவர்கள் குணமும் ஒன்றே!

பந்த பாசங்களைத்
துறந்து வாழ்கின்றேன்
சொத்தாக நினைத்த
சொந்தங்களால் செத்துப் போன மனதுடன்

உறவுகளால் உடைந்தே போனேன்
உண்மை இல்லாத உள்ளங்களை
உயர்வாக நினைத்ததால்...

# மனசாட்சியே சாட்சி

உலகறியும் உன்னுள்ளம்
நீயறிவாய் நீ யாரென.

வாய் கிழிய வக்கனையாக பேசிடுவாய்
உத்தமன் நானென
உன்னுள்ளம் உள்ளேயிருந்து
உரைக்கும் நீயாரென.

கடவுள் பக்தியும் கண்ணில் கருணையும்
ஊரார் பார்வைக்கு பக்தியின் முக்தியாக
தம்பட்டம் அடித்தாலும்
உன் அகமே உனையறியும் நீயாரென.

நீ நல்லவன் உள்ளத்தால் உயர்ந்தவன்
உண்மைக்கு குரல் கொடுப்பவன்
உதவிக்கு முன் வருபவன்
இப்படி, உனை பற்றி நாலுபேர் வேண்டாம்
ஒருத்தர் சொல்லட்டும் நீயாரென.

நீ வல்லவன், நீயே உன்னை புகழ்ந்துக்கொள்வது
உனையே நீ பாரட்டுவது
உனை புத்தனாக காட்டிட போராடுவது
பொய்க்கு வெள்ளையடித்து உண்மையாக காட்டுவது
பலர் கண் பார்க்க உதவுவது
செய்த உதவிக்கு மணிமகுடம் தேடுவது...

போலிக்கு உத்தரவாதம் அளிக்காதே
உன்னை நீயறியாமல்
நீயாக உயரத்தில் பறக்காதே!

ரிம்ஸா டீன்

## குடிசை வீடே போதும்

போதும் போதும்
பகட்டு வாழ்க்கையும்
பாழடைந்த மாடி வீடும்

தகுதியை தீர்மானிக்கும்
தளபாடங்களும்
பாசங்களை திரும்பி
பார்க்க வைக்கும்
பளிங்குத்தரையும்

ஏறிச் செல்ல படிக்கட்டும்
ஏளனமாய் பார்க்க வைக்கும்
ஏசி அறையும்

திருவிழாவை மிஞ்சும்
மின் விளக்கும்
அலங்காரத்திற்கு மட்டுமே
அற்புதமான சமையல் அறையும்

இன்னுமின்னும்
எத்தனையோ ஆடம்பரமும்
பாதி இன்பமும்
பாழாய்படுத்தும் சொந்தங்களும்
நாடக மேடை ஒன்றிலே
நல்ல கதாபாத்திரங்கள் ஏற்று
காலாவதியான உள்ளங்கள்.

உண்மைக்கு சமாதி கட்டி
போலிக்கும் பொய்யுக்கும்
ஒப்பனையிட்டு

வேஷம் விஷமும் கலந்த
உறவுகளுடன் கூடி
வாழ்வதை விடவும்
தனியே...
பச்சைத் தண்ணீரை அருந்திவிட்டு.
கட்டந்தரையிலே படுத்துறங்கும்
குடிசை வீடு போதுமே...

கோடி இன்பம் காணலாம்!

## கடிதம் எழுதும் கவிதை நான்

வார்த்தைகள் வேண்டாம்
வார்த்தைகள் வேண்டாம்
எனை மறந்துபோனதாக
நீ உதிர்த்திடாதே
ஒரு சொல்லேனும்
நான் இறந்து போய் விடுவேன்
இதயத்தினாலே

காதலாக காயம்
கண்ட பின்னும்
நான் காவல் காப்பது
உன் நேசம் தந்த
நினைவுகளைத் தானே

ஏனோ...
எனது முழுதுமான
இமயம் கொண்ட துயரங்களையும்
மறந்தே போனேன்
நீ தந்தப் பிரிவின் வலிகளைத் தவிர
நீ தந்த வலிகளும் எனக்குள்
சுகமாகவே இனிக்கின்றது.

ஊரார் பார்வைக்கு
காதலாக மட்டுமே தோன்றிய
எம் நேசம்
எமக்கு மட்டும் உயிரின்
வடிவாக தோன்றிட காரணம்
வெறும் உடல்களின் உணர்ச்சிகளை
கொலை செய்தே வளர்ந்ததாலே...

உருவம் உடல்
அற்ப இன்பம்
அறிவிலி ஆசை
இவைகளைத் துறந்த
எம் காதலை...

நீ துயரம் தந்து மறந்து சென்றாலும்
என்னால் மறந்திட முடியாது வருந்துகின்றேன்.

கரைச் சேர்ந்தும்
கடலில் நங்கூரமிட்ட கப்பலாக
காத்திருக்கின்றேன்
கரை வந்தும் கானல்
நீரான என் காதலை எண்ணி...

இப்படிக்கு
நீ மறந்துபோன உன் ஞாபகம்!

# காலம் பொன்னானது

புரண்டோடிய காலத்தோடு
பறந்தோடிப் போனது
என் கடந்தகால பசுமைகள்!

தவறிய பாசங்களும்
நான் தவறவிட்ட நேசங்களும்
இன்று வரை என் கைக்குள் அடங்காத
என் கைக்குட்டை போலவே
தொலைத்து விடுகின்றேன்.

தொலைதூர அகல் விளக்காக
என் விழிகளில் புலப்படும்
கடந்த கால நினைவுகளின் சின்னங்களே
என் நிகழ்கால பாதைகளுக்கு
ஒளிதந்துச் செல்கின்றது

முந்தைய நாட்களின் இன்பங்கள்
கண்ணில் காட்சியாக வந்து வந்துபோக
அறிவுக்கு எட்டியது கடந்த காலமென்பது
எவ்வளவு தூரம் பொன்னானது!

உறவுகளை மட்டுமல்ல
உடமைகளை மட்டுமல்ல
என் உணர்வுகளையும் நான்
தவறவிட்டே கடந்து வந்தேன்
இந்த மரத்துப்போன
நாட்களை வாழ்ந்து முடித்திட...

## மரணம்

இருக்கும் வரை இறுமாப்பு

இயலாமை காண்பது
இல்லையென ஒரு மப்பு

அசையும் நாவின் இசைவாக்கத்தில்
உள்ளம் பிசையும் ஒலியெழுப்பி
தூர்வார்வது!

தான் மட்டும் வாழவும்
மற்றவன் தாழவும் வேண்டுமென நினைப்பதுவே
இந்த இதயத்தின் செயற்பாடு

இயக்கத்தில் உள்ள நரம்பு மண்டலம்
வேலை நிறுத்தம் செய்யும்வரை
எவரும் அறிந்திடவில்லை
உயிர் என்பது உயர்வானதென்று!

ஆடி அடங்கும் போது
மனம் ஆழம் கொண்டு யோசிக்காதே...

ஆறிலும் ஆறுபதிலும்
ஆண்டவன் அழைக்க ஆற்றலாய்
பிறர் போற்றி வாழ்ந்திட
நீ எந்நாளும் பிறரை தூற்றி வாழ்ந்திடாதே...

# அறியாதவளா நீ

உன் மௌனம்கூட
அழகாய்த் தான் உள்ளது எனக்கு!

உன்னிதழ் உதிர்க்கும்
வார்த்தையானது என்னுள்
பல அற்புதங்கள் புரிந்திடும்
பெண்ணே அதை நீ அறிவாயா?

அனைத்தும் அறிந்தும் ஏனடி
உனக்குள் இன்னும் ஏதுமறியாதவளாய்...
நீயெனை வதைப்பது கொடுமையல்லவா?

தள்ளித் தள்ளிப் போகின்றாய்
என்னைத் தவிப்பில்
ஆழ்த்தி நகர்கின்றாய்

என் உணர்வுகளை
உணராதவளாய் நடிக்கின்றாய்

உன்னை விரும்பும் என்னிதயத்தை
துன்புறுத்தி இன்பம் காண்கின்றாய்/

சொல்லிடு கண்ணே
நான் உனக்கு எப்படி புரியவைப்பேன்
உன்னிலான என் நேசத்தை
எந்த வகையில் உணர்ந்திடச் செய்வேன்
உன்னிலான என் பாசத்தை...

## பெண்ணாகப் பிறந்தவள்

இடி இடித்தவள் நெஞ்சுக்குள்
இமைப்பதெல்லாம் ஏனோ
இடிச் சத்தம் போல...

விழியில் வழியும்
கண்ணீரின் பாதைகளின்
வழிகள் கரடு முரடானதே

இருட்டின் இனிமையும்
தனிமையின் அமைதியும் போதுமானதே
இன்னும் சில வழி(லி)களை கடந்திடலாமென
உறுதி கொண்டது எனதுள்ளம்,

காலத்திற்கு காலம் துயரங்கள்
மாற்றம் பெறுகின்றதே
தவிர, மறைந்திடுவதில்லை!

இவளின் அமைதியை கண்டு
மகிழ்ந்து பார்க்கும் கூட்டம்
அறிந்திருக்கவில்லை
பெரும் புயல் அடித்த இடம்
அமைதிகாணுமென!

மலரோடு பிறந்தாலும்
முள்ளோடு போராடும் இவள் மனம்
சோலையில் வீற்றிருந்தாலும்
பாலைவனம் உணரும் இவள் உணர்வுகள்
பெண்ணாக பிறப்பது மட்டுமல்ல
வாழ்ந்து முடிப்பதும் கடினம்தான்
பெண்ணென்றால் பொறுமை தான்!



**ரிம்ஸா டீன்**

# மொழி பெயர்க்கப்படாத மௌனம்

வலிகளே வாழ்க்கையான பிறகு
இதழ்களின் வார்த்தைகள் யாவும்
இழப்பினைஅணைத்துக்கொண்டதே
உற்ற உறவாக!

சிந்தனைகளால் செதுக்க முடியாத
சிரிப்புக்களால் மறைத்திட முடியாத
என் சோகங்களை
வரிகளுக்குள் காயவிடுகின்றேன்
கண்ணீர்கள் ஈரப்படுத்திய தடங்களை
மறந்து வாழ்ந்திட...

கற்பனையோடு பல கதை பேசியே
கனவுலகினில் பவனி வருகின்றேன்
என் தூக்கம் என்னில் பல
ஏக்கங்கள் தந்துச் சென்றதால்

வாழ்க்கை பாதையில்
வலிகளை கொண்டே ஆரம்பித்து
வாய்பேசிட மொழிகளை
மறந்த தருணங்களில்
என் வலிகள் யாவும்
மொழிப் பெயர்க்கப்பட்டன
மௌனங்களாக!

வலிமையில் உருவான வரிகளல்ல
வலியில் உருவான வரிகள்
இன்று வலிமையில்
மொழி பெயர்க்கப்படாத மௌனமாக!

# பரிதவித்த மகளின் படிமங்கள்

தந்தையேஉன் அன்பின் அறிமுக முகவரிகளை
நீ அழித்துச் சென்றது நியாயம்தானா?

எனக்கு ஆதியாகிய நீயும்
அன்புக்கு துரோகமிழைத்தாய்
இது தர்மம் தானா?

உன் ஒரு துளி அணைப்பையும்
பெறவில்லை என்றால்
நானும் பாவிதானே இப் பூவுலகில்

உனக்கு மட்டும்
ஏனோ என்மீது பாசம்
பகட்டுக்கும் வரவில்லை

எனை வெறுத்திடக் காரணம்
இன்று வரை அறியவில்லை

உங்க பிரிவுக்கும் புத்தியின்மைக்கும்
மூலதனம் என் உணர்வுகள் தானா

உங்களில் உருவான சித்திரம் நான்
இன்று சுவரில்லாமல்
சித்தரிக்கப்படுகின்றேன்
இதுவும் உங்கள் விருப்பம் தானா?

ரிம்ஸா டீன்

# நிபந்தனைகள் அற்ற அன்பு

அன்பென்பது ஊற்றைப்போன்றது
அள்ள அள்ள குறைந்திடாது

பணத்தினாலோ பகட்டினாலோ
பாசம் காட்டிட முடியாது

பயத்தினால் வரும் அன்பானது
வீரம் வந்தால் வீழ்ந்திடும்

அழகினால் வரும் அன்பானது
கலாவதியாகிவிடும்
பொருளின் ஆயுள் போன்றது

உறவுக்கான அன்பானது
காற்றடித்தால் அணையும்
தீபம் போன்றது

கடமைக்கான அன்பானது
நேரம் கடந்தால்
வஞ்சிக்க கூடியது

காமத்திலான அன்பானது பசித்த
வயிற்றுக்கு உணவளிக்கும்
நேரம் போன்றது

காதலினாலான அன்பானது
திருமணத்தின் பின்
காணாமல் போவது

கருணையிலான அன்பானது
உருவில்லாத சிற்பம் போன்றது

கர்வத்திலான அன்பானது
தீக்குச்சி போன்றது

அன்பினாலான அன்பு மட்டுமே
உயிரைவிட மேலானது

# கனவா இவள் காதலியா

அத்துமீறிய சுனாமியாக என்னை
ஆதிக்கம் செலுத்துகின்றாள்

இரவின் இருள்களிலும் என் கனவுகளுக்குள்ளே
பல வர்ணங்களை வீசிச் செல்கின்றாள்

பகலின் பசுமைக்குள் என்னில்
இருட்டறைகளைத் திறந்திடுகின்றாள்

வானில் உயரம் பறந்திட, என்னுள்
கற்பனைச் சிறகுகளை பொருத்துகின்றாள்

தரையின் என் கால்கள் பட்டுவிட
பல தடைகளை தருகின்றாள்

உணவை மருந்தாக மாற்றிவிட்டாள்
தினமும் எனக்கு காய்ச்சல் கொண்டு
மருந்தை உணவாக்கிட்டாள்

என்னுள் வேலி தாண்டி
வேடிக்கை செலுத்துகின்றாள்
அவளை மறைவான மதில்களிட்டு
வேலி பூண்டாள்

இவள் யாரோ
நிலவின் மகளா
என் நிஜங்களின் நிழலா
உயிரின் உணர்வா இல்லை உணர்வின் உருவமா
என் கனவா இல்லை காதலியா?

# மீண்டும் பள்ளிக்குப் போகலாம்

பள்ளி வாழ்வின் பசுமைகள்
சொல்லில் அடங்கா இனிமைகள்

இளமைதனில் யௌவனப் பருவத்தில்
ஆனந்தமாக கழித்த தருணங்கள்

ஒன்றுமில்லாக் காலத்திலும்
அனைத்தும் அனுபவித்த சுகமே தனி

இன்று அனைத்துமிருந்தும்
மனம் நாடுவதே வகுப்பறை
மேசைதனை மட்டுமே

அந்த கரும்பலகையின் கருமை
எம் கனவுகளின் வதிவிடங்களே
எம் எதிர்கால திசைகாட்டியும் அதுவே

ஆசிரியரின் மேசை விரிப்பின் அலங்காரம்
எம் கண்முன்னே
காட்சியளிக்கும் சோலைவனம்

சீருடையின் பெருமை
இன்று நான் அணியும் பட்டாடையில் இல்லை
அந்த எளிமையின் அருமை

கண்ணீர் விட்டாலும், கதறி அழுதாலும்
நெஞ்சங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கும்
புத்தகச்சுமையின் சுகமான
பொழுதுகள் இனி கிடைத்திடுமா?

ரிம்ஸா டீன்

# மழலைகளை நெருங்காதே

சிதைந்துபோன அந்த சிறுமலர்
நந்தவனமாக வீற்றிருக்கும்
சுவனத்தில் நறுமணமுடன்

சிதைத்தவன் அவனின்
உடலெங்கும் சீழ் வடியும்
நிலையில் சீரழிந்து
திரிவான் நரகத்தில்

என்ன மனம் பிடித்தவர்களோ
என்ன குணம் படைத்தவர்களோ
இவர்களைப் பெற்றார்களா இல்லை
ஒன்றும் புரியவில்லை

மதங்களையும் தாண்டி மனிதன் என்பவன்
மனசாட்சி உடையவானாய் இருப்பான்
என்றல்லவா நினைத்திருந்தோம்
நினைப்புகளில் மண்ணைவாரி இறைத்தார்களே

இரும்பினாலான இதயங்கள் உருவாயிற்று
இனி எதுவும் பேசி பயனில்லை
மடிந்து போன மலரை மலர வைத்திட முடியாதே
எம் ஆதங்கம் கூட
கிணற்று தவளை மாதிரி
இன்று இதுவென்றால்
நாளை இன்னொன்று

இரத்தம் கொதிக்க உணர்ச்சி வசப்பட்டு பயனில்லை
குற்றமிளைத்தவனைச் சுட்டுக்கொல்லாதவரை
இன்னொருவன் பயப்படபோவதில்லை

என் விரல்களை பேனா கொண்டு எழுதவைத்தவன்
ஒரு சந்தரப்பம் கையில்
துப்பாக்கி தந்தால்
ஒட்டுமொத்த நிலுவையில் இருக்கும்
சிறுவர் துஸ்ப்பிரயோக வழக்குகளை
சுட்டு தள்ளியே முடிவு செய்வேன்
அப்போது...
மற்றவன் மனதளவில் கூட நினைக்க மாட்டான்
மழலைகளை நெருங்க!

# என் கணவன் என் காதலன்

தகுதி தராதரம் பாராது
தரமாக பதவி தந்தாய் உன்னில்

தவறியேனும்
என் தண்டவாளம் நிலை மாறாது
உன் கிளையில்
நானும் ஒரு அங்கம்தான் எந்நாளும்

மாடி வீடும், கோடி பணமும் தந்திடாத
பாசம் என்னில் நீ வைத்தாய்

வைரங்கள் பரிசாளிக்காவிடினும்
வஞ்சம் நீ தரவில்லை என்பேன்

வறுமையான வாழ்விலும்
வசந்தங்களை நீ காட்டினாய்

ஏறி போக வாகனம் இல்லாவிடினும்
என்னை செல்லமாக தூக்கி
அணைக்க உன் கால்கள் ஓடிவர
தாமதிக்கவில்லை கண்ணா

பட்டாடை தர வசதியில்லை என்றாலும்
பகட்டுக்கு நீ மாவிடிக்க ஆசை கொள்ளவில்லை.

அடுத்தவர் பார்வைக்கான
வாழ்வில்லை என்றாலும்
பார்க்க சகிக்காத
வாழ்வு வாழவில்லை எந்நாளும்

ஊர் காண சண்டையிட்டதுமில்லை
நாலு சுவருக்குள் அழுது மறைத்ததுமில்லை

ஆடம்பர வாழ்வு இல்லாவிட்டாலும்
அழுது புலம்பும் வாழ்வு நீ தரவில்லை மன்னா!

மார்தட்டி சொல்வேன் நீ தான்
என் மன்னன் என்றும்
நான் விரும்பும் கண்ணன் என்றும்!

# முடியுமா உன்னால்

முயன்று முயன்று
நடை பயின்றேன் முடிவில்
ஊனமானேன் கால்கள் இருந்தும்

தாளம் தட்டி தட்டி சங்கீதம் பயின்றேன்
சான்றாக காதுகள் செவிடானதே

கற்பனை கொண்டு கவிகள் வரைந்தேன்
என் கைகள் அவமானத்தால்
வெட்டுப்படும் வரை

வானில் பறந்து திரிந்தேன்
என் சிறகுகள் சிறைபடும் வரை

ஓவியனாக உலா வந்தேன்
கண்கள் குருடானதே

காதலில் கனாக் கண்டேன்
என் கனவுகள் விலைபோனதே

சிந்தித்துப் பார்க்க சந்தங்கள் இருந்தும்
என்னை நிந்தித்துச் சென்றதே சங்கதிகள்

எல்லாமே இருந்தும்
வெற்றுச்  சுவராக மாறிவிட்டேன்
இனி என்னால் எது முடியும்?

# நான் பார்க்காத சுதந்திரம்

கொடிகளை உயர்த்தி
பறக்கவிடுவது சுதந்திரம் என்கின்றார்கள்

உணர்வுகளைக் கட்டிப்போட்டு
உண்மைகளை புதைத்துவிட்டு
பெண் உரிமைகளை மீறிவிட்டு
பெண்ணை புண்படுத்தி
அவள் கனவுகளை காயப்படுத்தி
பத்துமாத பிஞ்சை கூட
பத்திரப்படுத்தாத இந்த சமூகம்

பத்து மாதம் சுமந்தவளை பாழடைந்த
வீட்டில் தனித்துவைத்து
பழாக்கிய இந்த சமூகம்

சீதனம் என்னும் புற்று நோயினால்
இன்னும் சுகம் காணாத இந்த சமூகம்

பெண் கல்வியில் கரைகாணாத இந்த சமூகம்

பெண் விடுதலைகளை காகிதங்களில் மட்டும்
எழுதிவிட்டு செயல்படுத்தாத இந்த சமூகம்

பெண்ணுக்காக சம உரிமைகளை
வீட்டினுள்ளே கூட வழங்க
விரும்பாத இந்த சமூகம்

சுவரில் ஓவியமாக இருக்கும்
பெண் உருவை கூட காமமாக
கண்டு கழிக்கும் இந்த சமூகம்

பெற்ற பிள்ளைக்கும்
பெற்ற தாய்க்கும்
கட்டிய மனைவிக்கும்
உடன் பிறந்த சகோதரிக்கும்
உயிர் தோழிக்கும்
வித்தியாசம் தெரியாத
குருட்டுச் சமூகம்

வன்முறைச் சமூகம்
அரக்கன் சமூகம்
அடாவடிச் சமூகம்
அசம்பாவிதச் சமூகம்
அடக்கி ஆளும் சமூகம்
நெஞ்சை நிமிர்ந்து கொடியேற்றுகின்றது
சுதந்திரம் கண்ட நாள் என்று
நான் என்றும் காணவில்லை
இவருரைக்கும் சுதந்திரத்தை!

# நீ எனை தொலைத்தாய்

நான் நகம் வெட்டினாலும்
உன் நினைவே
மண்ணில் நடந்தாலும்
உன் நினைவே
விண்ணைப் பார்த்தாலும்
உன் பிம்பமே
என் கண்ணுக்குள்ளும்
உன் உருவமே
என் இரவுக்குள்ளும்நீயே
கனவிலும் நீயே

காகம் கரைந்திட வாசலை
வந்து பார்க்கின்றேன்
விருந்தாளியாக நீ வருவாய் என

இரவினில் இமைகள்
இருமூடி கருமையில்
உனைத்தேடினேன்
கனவில் நீ வருவாய் என

அலைபேசி அலறுகையில்
அவசரமாய் வந்து
பார்க்கின்றேன்
அழைத்தது நீயாக
இருக்ககூடாதா என

என் பெயரைச் சொல்லி
யார் அழைத்தாலும்
பல ஏதிர்பார்ப்புகளுடன்
திரும்பிப் பார்க்கின்றேன் தூர

இருந்தாவது எனை நீ
அழைக்க மாட்டாயா என

எனக்குள் எல்லாமக
நீயாகிப்போனாய்
உனக்குள் நான்
எப்பொழுதாவது
வந்துபோனதுண்டா
சொல் உயிரே

எத்தனையோ கவிதை
எழுதிவிட்டேன் உன்னைப் பற்றி...

அதனில்,
என்னுள்ளாலான சோகத்தை
வரிகளில் வடித்திட முடியவில்லை

உன்னால் இதயத்தை தொலைத்தேன்
நீயோ என்னை தொலைத்தாய்!

# நீ மட்டும் எப்படி

உன் மௌனங்களோடு
சண்டையிட்டு நான்
மரணித்துக்கொள்ளும்
வினாடிகளில் எல்லாம்
உன் நிலா முகம்
அடிக்கடி தோன்றி மறையும் என்னுள்

என் வீட்டு ரோஜாச்செடியில்
உள்ள பூக்களின் சிரிப்பில்
உன்னழகை நான்
ரசித்து கொண்டிருந்த
காலங்கள் என்னினைவில்
வந்து போகின்றது

உன் வருகைக்காக
கால்கள் கடுக்க காத்திருந்த
அந்த மாமர நிழல் இன்று
எனைப் பார்த்து ஏளனமாய் சிரிக்கின்றதே

ஒவ்வொரு விசேடத்திற்கும்
நீ எனக்களித்த ரோஜாபூச் செண்டு
இன்று, உனைக்காணாமல் கண்ணீர்
விடுகின்றதே உயிரே...

உனை ஞாபகமூட்டும் என்னிதயம் கூட
இன்று வெம்பி
உணர்வில்லாது துடித்திட
நீமட்டும் என் நினைவுகள் இல்லாமல்
எப்படி சுவாசிக்கின்றயோ...?

**ரிம்ஸா டீன்**

# யாரை நம்புவது

உண்மைகளுக்குள்
உண்மைகளை தேடும் உலகம்
ஊமையாகிப் போன நேர்மைகள்
தோற்றம் அளிக்கின்றன துரோகங்களாக

பொய்களுக்கு அளிக்கப்படும் அலங்காரத்தில்
எத்தனையோ? அற்புதங்கள்
மெய்கள் இங்கே முதிர்க்கன்னிகளாக

வாய்மை வெல்லும் என்ற கதைகள்
வாசிப்பதற்கு மாத்திரமே
உள்ளங்களில் ஊன்றப்படும்
உவமைகள் யாவுமே கலப்பு கலந்ததே

வாழ்வில் சூன்யம் வைத்த மனிதன்
வாழ்க்கையில் மாயம் கண்டான்

அறுபது வயது ஆயுளில்
நாள்தோறும் புதுப்புது வேடங்கள் பூண்டான்

வேதங்களை மறந்து
வேதாந்தம் பேசினான் தன் விவேகம் இழந்தான்

நம்பிக்கை பாத்திரம்
ஓட்டையிடப்பட்ட சாஸ்த்திரத்தில்
பலர் காண நீர் இறைத்தான்

யாரை நம்புவது யாரை நோவது
யாவரும் இப்படியே என்பதில்
ஒற்றுமை மட்டுமே நன்கு ஒத்துப்போனது!

# கடலோர கவிதை

நீலவான வெளிக் கீற்றில்
நிலவின் ஒளி ஊற்றில்
காற்றின் அசைவினிலே
நான் கண்ட காட்சிக்கு
சாட்சி வெண்ணிலவே

நிறம் மாறிய மஞ்சள்
மின்மினிகள் தோன்றிடவா
இங்கே பஞ்சம்

கண்சிமிட்டும் தாரகையாய்
தங்க நிறமாய் தவழும்
வண்ணம் அழகே அழகு

கடல் அலைகளின் ஓசையில்
நான் வீற்றிருந்தேன் ஆசையில்
கால் நனைக்கவா? இல்லை இல்லை!

அலை கரையைத் தொட்டுவிட
நான் அதை கட்டியிழுக்கவே

தனிமை என்னுள் இனிமையாக
நிலவு எனக்குள் துணையாக
மணற்பரப்பில் பல மணித்தியாலயங்கள்
மகிழ்ச்சியாக கடந்திட

கால் நனையவில்லை என்றாலும்
என் உள்ளம் மகிழ்ந்தது உண்மையே
நிலவின் ஒளியை தனியே ரசித்ததால்...

# விடுமுறையும் விடலைப் பருவமும்

பள்ளி விடுமுறையென்றாலே
அட்டகாசம் அட்டகாசம் தான்
வேறில்லை எம்காலத்தில்

தவணைக்கு முன்னே
அட்டவனைப்படுத்திக்கொண்டு

சோடா மூடிகளைச் சேர்த்து
பளிங்குப் பந்து விளையாட்டும்

டப்பாவுக்கு மேல் டப்பா வைத்து
அதை உடைத்து ஓடி ஒழிந்த விளையாட்டும்

காட்டுக்குள் நுழைந்து விறகு தேடியும்
மாலை வீடு திரும்பி உம்மாவிடம் அடிவாங்கியும்
அழுத நாட்களை நினைக்கையில் சுகம் சுகம்

அறியாவயதின் சில்லறைகளை சேகரித்து
என்றோ ஒருநாள் செத்துப்போன
நண்பனின் அணிலுக்கு
கத்தம் பாத்தியா ஓதி
இனிப்பு வழங்கி பகிர்ந்து உண்ட நாட்களை
இன்று நினைத்தாலும்
இதயம் இனிக்குதே இனிக்குதே!

மணல் வீடு கட்டுவதும்
சில்லறைக் கடை போடுவதும்

சட்டி பானைகள் சேகரித்து
கூட்டாஞ்சோறு சமைத்து

மத பேதமின்றி ஒன்றாக உண்டு மகிழ்ந்த தருணம்
கூடிவிளையாடிய விடுமுறையில்
குதூகலம் குதூகலம் தான்!

மாமி வீட்டுக்கு தங்கிடச் செல்வதும்
மச்சாள்களுடன் வீதியிலே
உலாப் போவதும்
குளத்திலே குளிப்பதும்
கும்மி பாட்டும் ஆட்டமும் ஓட்டமுமாக

வீடு திரும்பும் தருணம் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைப்பதும்
பின் கடிதங்களில் உறவை வளர்ப்பதும்
அடுத்த விடுமுறை வந்த முதல் நாளே
ஊருக்கு வருவதாக வாக்களிப்பதும்
ஒரு தவணை விடுமுறையில் ஓராயிரம்
ஆனந்தம் ஆனந்தம்!

நாகரிகம் வளர இவையனைத்தும் மறைந்து செல்ல
இன்றைய தலைமுறையின்
உணவு மட்டுமல்ல வாழ்க்கையும்
செயற்கையாகிப் போனது.

என்றாலும், எமக்கு நினைத்துப் பார்க்க
அழகிய தருணங்களைத் தந்துவிட்டு
நகர்ந்து சென்ற கடந்த கால
இனிமைகள் மட்டும்தான்
எமக்கு வசந்தகாலம்!

கத்தம் பாத்தியா ஓதி =
இறந்தவர்களின் சுபீட்ச்சத்துக்காக வேண்டுதல்.

## தந்தையாகிய தலைவர்

மாநபியின் வரலாற்று சம்பவம் ஒன்று
என் காதில் விழுந்தது நன்று!

உம்மி நபி மகளாம்
சுவனத்து கதாநாயகி
மங்காத மாணிக்கம் மாதர்
குல மல்லிகை
அன்னை பாத்திமா ரலி
நாங்கள் போற்றும் பக்தி மான் இவரே!
அன்பு நபியின் ஆசை மகளும் இவரே!

அண்ணல் நபியவர் தன்னைத் தேடி நாடி
வீட்டுக்கு வருகைதரும்
மகளை எழுந்து நின்று தழுவி
வரவேற்பு செய்யும் வள்ளல் குணம்
கொண்டவராம்!

யார் இருந்தாலும் எதை பற்றி
கலந்துரையாடி கொண்டிருந்தாலும்
அவர் இருக்கும் அமர்வை கூட தன்
மகளுக்கு கொடுத்து கண்ணியம் செய்த
மாபெரும் மாமனிதர் இவரே!

இவரோ உலகத் தலைவர்
அகிலம் போற்றும் மாமனிதர்
இறைவனின் தூதர்
இறுதி போதகர் என்றாலும்
தன் மகளுக்குத் தந்தை என்ற இடத்தில்
இவர் கொள்கையில் மாற்றமில்லை

மகளுக்காக தந்தை என்ற சிறப்பை
உயரத்தில் வழங்கிய நாயகரும் இவரே!

பெண்களின் மனதில்
தனி மதிப்பால் கொண்டாடும்
உயர்ந்த கண்ணியமானவர்!

ஆண்கள் அடக்கி ஆளுவதைவிட
அன்பால் ஆளுமை செய்ய பணித்தவர்!
அதை செயலிலும் செய்து காட்டியவர்!

இவரைப் போன்ற உள்ளம் கொண்ட
எவரையும் (தந்தையினை) நாம் கண்டதில்லை,
இவரைப் பின் பற்றுவதில்
பெருமை அன்றி வேறில்லை!!!

# வளையாத வானவில்

வானலோகத்தின் விருந்தாளி நானே
வையகம் காண, வில்லாகி வந்தேனே
ஏழு வண்ணங்கள் சுமந்தே வந்தேன்
ஏகாந்தம் விடிய இனிதே வந்தேன்

எட்டிப் பிடிக்க இயலாத இவளை
தொட்டுப் பார்க்க நினைப்பது வியப்பல்லவா
கனவாகினும் அதில் கருவாக.
நான் வர விரும்பவில்லை
கரும் வர்ணம் இல்லாத
உள்ளத்தில் சுய வர்ணம் காண்பிக்க
உன் வர்ணம் நான் கண்டேன்.

நிறத்தில் மாறினாலும்
என் குணத்தில் மாற்றமில்லை
நான் என்றும் தூயவளே
எனக்கு என்னை தெரியும்
அன்பை தூய்மையாகப் பங்கிடுபவள்
தாய்மைபோன்றதே என் உறவும்

உனை கோபுரத்தில் வைத்தேன்
நீயே உனை வைக்கோல் என நியாயப்படுத்தினாய்
உண்மைகள் என்றும் கசப்பானவை
உன்னுள்ளத்துக்கு உரிய வார்த்தைகளில்
ஒரு சிலதை நீ பொறுக்கிட நினைத்தால்
உன் மனசாட்சியே உனைக் கொல்லும்

நம்பிக்கை என்ற சொல்லில்
நச்சுத்தன்மை கலந்து
உன்னையே நீ பொய்யாக்கினாய்

நிரந்தரமாக தாராளமாக
உனக்கிருக்க சொந்தமான சொத்தாக
இன்னொன்று வாங்கிட
வழியிருக்க மார்க்கமிருக்க
என்னிடம் மண்டியிட்டு
கெஞ்சுகின்றாய்
அற்ப நொடிக்காக
எனக்குள்ளதை உனக்கு தர நான்
கொடைவள்ளல் அல்ல

கொஞ்சம் தாகம் தீர தண்ணீர் கேட்கின்றாய்
அதுவே நெருப்பாக பின்னாளில்
உன் நலவுகளை எரித்திடும்
உனக்கு வளைந்து கொடுக்க நான்
மூங்கிலும் அல்ல!

# தாய் வீட்டுக்கு விருந்தாளியானேன்

மிகைத்தெழும் கடலலைகளாய்
மறைத்து நிற்கும் வான் மேகமாய்

தடுத்திடும் சீனப் பெருஞ்சுவராய்
பெண் மனதில் அடக்கிவிட்டாள்
அவள் ஏக்கங்களை!

மணமேடை கட்டி
மருதாணியிட்டு
மலர் மாலைச் சூடி
அலங்காரம் தோரணையில்
பொன்னகையிட்டு புன்னகை மறந்தாள்

பல விழிக்ளுக்கு இவள் விருந்தாக
காற்றில் காணாமல்
போனாள் அவள் சருகாக!

மனப் போராட்டங்களின்
மத்தியில் மனதோரத்தில் சிலையானாள்

விபச்சாரத்தை விட
கொடுமையான
கலச்சாரம் காணும்
திருமண நாளாம்...

இனி திரும்ப வராத
இன்றிருக்கும் வாழ்வை
முடிக்கவேண்டிய நாள் தானோ
அலங்காரத்தோடு மனம்
அங்கலாக்கின்றதே

ஒப்பந்த அடிப்படையில்
சம்பந்தப்பட்ட இருவரின்
உணர்வுகளும் இனியெப்படி எப்படியோ?

என்னை கட்டிக் கொடுத்த
திருப்தியில் பெற்றோர்
கண்ணை கட்டி காட்டில் விட்ட நிலையில் நான்

புதுவரவாய் வந்த புதிர்
இவர் விடுகதைகளின்
மூடிச்சுக்களை அவிழ்ப்பது எப்படியோ

அவர் விருப்பமேயென் விருப்பாகும்
இவர் சொந்தமே இனியென் சொந்தமாகும்

சமையலறை என் சொத்தாகும்
என் சொந்த பந்தம் தொலைந்தேபோகும்
என் நட்புகளினி நாட்குறிப்பில் அடங்கிவிடும்.

என் ஆசையும் நேசமும் மௌனித்துவிடும்
என் கனவுகளும் கலைந்து விடும்

என் உடன் பிறப்பும் கைக்கெட்டிய தூரம் போகும்
என் தாய் வீட்டுக்கும் இனி நான் ஒரு விருந்தாளியே!

# வரன் அமையாத வரங்கள்

பெண்ணாக பிறக்கையில்
மகிழ்ந்து போனார்கள் பெற்றவர்கள்.

வளர்ந்து வரும் போது பெருமைப்பட்டார்கள்
பருவமடையும் போது பூரித்துப்போனார்கள்
பருவமே கழிந்துபோகும் போது
கவலைப்பட்டார்கள்.

திருமணச் சந்தையில்
தோற்றுவிடுவோமென்ற அச்சத்தில்

அறிவு தந்து, ஒழுக்கம் தந்து
நல்ல கல்வியும் தந்த பெற்றோர்கள்
கலங்கியே நின்றனர்
சீதனம் என்னும் கொடுமையிடம்

சீதனம் என்ற இராவணனைக் கண்டு
இங்கே சீதையாய் பயந்து
ஒதுங்கிப்போனார்கள்
முதுமை எனும் இயலாமையில்
உள்ளத்தைப் பாராமல் பொன்னை தேடி
அலைகின்றனர் பெண்களிடம்!

ஒன்றும் வேண்டாமென வருபவர்களும்
கொடுப்பதை கொடுங்க வீடாக பணமாக
இது தானா ஒன்றும் வேணாம்...
இதற்கு அகராதியில் எல்லாம் வேணும் என பொருளோ?

இத்தனையும் கொடுத்துக் காட்டவருபவன்
நாங்கள் வாங்கிய கணவன்

இனியும் எதிர்பார்ப்பான் பலதை
இனி இவனுக்கு தவணை முறையில்
அடிக்கும் அதிர்ஷ்டம்
கரங்களில் மருதாணியும்
இதயங்களில் இருப்பாணியும்
சுமந்து வாழும் பெண்களே பல கோடி!

இன்னும் கேட்கலாம் பல மனக்குமுறல்களுடன்
உணர்வுகளையும் சேர்த்து
வாசல்படி தாண்டாத குமரிகள்
அடுப்பறையிலே கிழவியான கதை
இவர்கள், தான்வரும்போதே வாங்கி வந்த வரம்
வரன்கள் அமையாத வரம்தான்!

# உனக்காக என் கவிதை புத்தகம்

காற்றுக்கும் பிடித்துப்போன என் கவிதைகள்
உன் விழிகளுக்கு மட்டுமேன் பிடிபடவில்லை
கருவாக வரிகளாக உனை எடுத்து
என்னில் கவிதையாக கிறுக்குகிறேன்

விருந்தாக இல்லை மருந்தாகவே யாயினும்
விருப்புடன் நீ பார்க்காதது வியப்புத்தான்
என் வரிகள் உனக்குள் பதில் தரவில்லை
தயக்கம் தான் ஏனோ தெரியவில்லை

உணர்வுகளக் காட்டும் உன் அன்பு
நான் சுடுகாடு சென்றாலாவது வருமா?

தவிப்பிலே உந்தன் சாபத்திலே சாம்பல்
தூளாகி விடுவேனா சொல் உயிரே!

என்னை மழலை எனவே வர்ணித்தாய்
அதனால் என்னவோ அடம் பிடிக்கின்றது
சிறு பிள்ளையாக உனை தேடி இம்மனது

நீ தொலைவாகிப் போன பின்னும்
புத்திக்கு எட்டிய இவ்வசம்பாவிதம்
உள்ளத்தில் உறைக்க வில்லை ஏனோ?

நானும் மரித்துப் போவேன்
என் மனமும் மறத்துப் போகும்
நேரில் நீ வர மறுத்தால்
ஊமையாக பூமியுள் புதைந்து விடும்
என்னோடு என்னில் வசித்த உன் காதலும்!

# என்னை வாசித்துப்பார்

உனக்கான என் கவிதை புத்தகம்
உன் கரம் சேர்ந்திடவே ஆவல் கொண்டுள்ளது

அது என்னில் இருப்பதைவிட
உன்னிடத்தில் வசித்திடவே வரம் கேட்கின்றது

அதன் வரிகள் அனைத்தும் உனக்குரியதே
என்பதனால் என்னவோ...

வரிகளை உன் விரல்களால் வருடி
வாசித்துப்பார் உயிரே
என்னுள்ளத்து உணர்வுகளைக்காட்டும்
ஆனால், உன் கண்கள் கலங்கிடக்கூடாது

உன்னிதய ஓரத்தில் வைத்து வாசித்துப்பார்
என்னிதயம் உன்னில் கொண்ட நேசத்தை விவரிக்கும்

அன்றாவது நீ உணர்வாய்
நான் உன்னில் கொண்ட காதலை

காதலை உணர்ந்தவுடன் தேடி வராதே
உன்னிமைகளை மூடி உன்னுள்ளத்தில்
கை வைத்துப்பார் அப்போது உணர்வாய் என் காதலை !

சொல்லாத என் காதல் செல்லாக்காசு என்றாய்
செல்லாக்காசும் இன்று உன்னிடம் பல
கவிதைகள் சொல்லவைத்ததே...

# சிறைக் கைதியா நீ

இரவு வரைந்த கருப்போவியத்தை
கரைத்துப் போகின்றது
என் கண்ணீர்த்துளிகள்

காதலே உன் மடல் பிரித்து
பார்த்தேனென்று எழுதியிருந்தாய்
என்னை மறக்கவேண்டுமென
நீ மறந்திருக்க வேண்டும்
மரணத்திலா? கனவிலா?
என்பதை எழுத மற்ந்துவிட்டாய்!

நான் அழுவதை யெல்லாம்
எழுத வேண்டு மென்றால்
கொள்ளளவு போதாதடி
கடலுக்குக் கூட.

நேற்றைய பாடலில்...
காதலனாக இருந்த என்னை
இன்றைய கவிவரிகளின்
கருவாகமட்டும் மாற்றிவிட்டாய்.
என்னை வரச்சொல்லி அழைத்த
உன் கண்கள் இன்று மறக்கச் சொல்லி
ஏனடி மன்றாடுகின்றது.

நானறிவேன் அன்பே
நீ யொரு சிறை கைதியென
நீயேன் அறியவில்லை
நானுனை சிறைபிடிக்க மாட்டேன்
சிறை மீட்பேனென...

என் கனவுகள்  கலையும் முன்
நினைவுகளால் நோகடித்து செல்பவளே
ராத்திரிகளின்னும்  ரகசியமாய் விடிகின்றது
முடியும் என்னுயிரைப்போல்...

# நரகத்தை... அனுபவித்த நொடிகள்

பாதி மணித்தியாலயங்கள்
பதுங்கு குழியிலே கழித்த நாட்கள்
நட்சத்திரங்களுக்குப் பதிலாக
எரிகுண்டுகள் அலங்கரித்த வானம்
இடிமின்னல்களின் சத்தங்களையும்
மிஞ்சும் செல் அடிகள்

ஈழமெங்கும் இரத்தகறைகளினால் உறைந்தேப் போனது
உயிருள்ள உடல்களேப் புதைக்கப்பட்டு வதைக்கப்பட்டது
கல்லறைகளில் கல்வெட்டாய் போனது பலர்கனவுகள்
பச்சிளம் பாலகன்கள் செய்த பாவம் நானறியேன்
வயது பால் வித்தியாசமின்றி குண்டுகள் துளைத்ததே

ஊண் உறக்கம் மறந்துபோனப் பொழுதுகள்
அடுத்த நிமிடம் யார் தலைக்கு வேட்டு
எங்கே போவது எங்கே நிற்பது
எவருக்கு எவர் உதவிடுவது
பந்த பாசங்களும் பரிதவித்தேப் போனது
திக்குத் திசைகள் யாதும் என்னவென்றே
அறியாமல் பயணம் தொடர்ந்தது

விடுதலைக்கு என்றும் நாங்கள் துரோகிகளல்ல
எங்களின் மீது கருணையற்று தாக்கியது யார் குற்றம்

முள்ளிவாய்க்கால் இன்று வரலாற்றில் சுவடானது

ஆனால் அதன் தாக்கம் எங்களின் இதயங்களில்
ஆறாத வடுவாகிப்போனது.

# மௌனத்தின் கணக்கு

மண்ணுள் புதையுண்ட மாணிக்கமாய்
என் மனதுள் புதைந்து கிடக்கின்றன
உன் ஞாபக சின்னங்கள்.

என் உறக்கத்திலும் உன் உணர்வுகள்
விழியோடு உரசுகின்றன
நான் எனையறியாமலே
கலக்கமடைந்து விடுகின்றேன்.

எனக்காக வாதித்து தோற்றுப் போன
உன் பிஞ்சு மொழிகள் உணர்த்தின...
என் மீது நீ கொண்டது காமமல்ல
உண்மைக் காதல் என்று.

உன் காதல் மௌனமாக என்னொடு...
உறங்கிக் கொண்டிருக்கிறது
யாரும் அறியா வண்ணம்.

என் இதய இடது அறையிலே
உன் கயல் விழிகள்
விதைத்து சென்ற காதல் காவியமாக
கறைப்பட்டு கிடக்கின்றது
நீகூட வாசிக்கமுடியாத படி.

உன் இரக்கமான நினைவுகளை
என்னிதய வங்கியில்
வட்டியில்லாமல் வைப்பு செய்து
காத்திருக்கின்றேன்,
கல்லறைக்காவது வந்து விடு
என் காதல் கணக்கு காலாவதியாகுமுன்!

ரிம்ஸா டீன்

# நிறங்கள்

பல நிறங்கள்
வாக்குறுதி அளிக்கின்றன
பலதும் பலருக்கும் செய்திடுவோமென
உண்மையாக இருக்கலாம்

யாருக்கு யார் செய்கின்றார்கள்
இது அவர்கள் அறிந்ததே

பதவி வருமுன்
பந்திக்கு அழைத்தே விருந்துவைப்பார்கள்

பட்டம் சூடிக்கொண்டதும்
திரும்பி பார்க்க திசைகள் கூட
காணாமல் போகும்

நிறத்துக்கு நிறம் முண்டியடித்து
வாக்கு கேட்டு வரிசையில் வலம் வருவார்கள்

நாற்காலியில் அமர்ந்து கொண்டால்
தரிசனம் தரவே தயங்கி போவார்கள்

நிறத்தைக் கொண்டே
பல்லாக்கு ஏறிடுவார்கள்
பவனியினும் வருவார்கள்

ஆனால் ஏழைகள் அறிந்த நிறமென்றால்
வறுமையெனும் ஒற்றை நிறமே

## வலிதரும் உறவுகள்

எண்ணங்களின்
வண்ணங்கள் கலைந்து போகின்றன...

உவமைக்கு கூட உண்மைகள் இல்லாத போது
உலகம் இருண்டு போகுதே...

இதயங்களில் இரக்கம் கடுகளவும்
காணாமல் போகும்போதே...
அரக்கனும் நல்லவனாக காட்சி தருகின்றான்...

எதிர்பார்த்த அன்புகளினால்
ஏமாற்றமடையும் போதுதான்...
வாழ்வின் கடைசித் துளி, வழிப் பாதையும்
கண்முன்னே காட்சிதரும்
இதுதான வாழ்க்கை என்பது போல்...

உறவுகளால் உதாசீனம் கண்ட
உள்ளத்துக்குத்தான் தெரியும்
உணர்வின் உணர்ச்சிகள்
உயிருள்ள வரை வலிக்குமென்று...

# திரும்பி வராத தந்தை

பிரிந்துப்போன பாசம்
திரும்பிக்கூடப் பார்க்கவில்லை

பெண் பிள்ளை பெற்றால்
பேரின்பம் காணும் தந்தையுள்ளமாம்
அது பொய்யாகிப் போனதே

உன் உறவில் நீ என்னை இணைக்காமல்
துண்டித்து வாழ்ந்தாய் இன்று வரை
உன் அணைப்பில்
நான் அன்பை பார்க்கவில்லை
என் சோகமெல்லாம் சொல்லியழ
உன் மடி இடம்தரவில்லை

உனக்காக நான் காத்திருக்கிறேன்
நீ விட்டுச் சென்ற அதே மழலை மனதுடன்
என்று வருவாய் தந்தையே...
இந்த வளர்ந்த உன் மகளின் குறை தீர்க்க

என்னுடன் விளையாடிட
உன் தோள் மீது சாய்ந்து கதை பேசிட
உன் விரல் பிடித்து நடை பழகிட
இவையெல்லாம் இனி நடக்குமா?

உனக்காக ஒரு வாய்ச் சோறு
என் கைகளால் சமைத்து தருகின்றேன்
உன் துணிகளை துவைத்தே சுத்தம் செய்திடுவேன்
நீயெனக்கு செய்ய மறந்த சேவைகளை
உனக்கு நான் செய்து இன்பம் கண்டிடுவேன்
இனியாவது வருவாயா ?

# மௌனம் கலைத்திடு

கவிதை முகம் கொண்ட காரிகை
வண்ண நிறம் தீண்ட தூரிகை
இவள் விழிகள் பல கவி பேசும்
இவள் இதழ்களோ மொழி மறந்து பயணிக்கும்
இது இவள் கொண்ட கர்வமா?
இல்லை இவளின் உள்ளிருக்கும் காயமா?
தெளிவது எப்படி பெண்ணே!

உன் மௌனம் கலைத்திடு கண்ணே
இதழ் திறந்து உதிர்த்திடு முன்னே
உன் மொழியெதுவென அறிந்திடச் சொன்னேன்!

உன் இமை திறந்து வழி விடு
உன் இதயம் அதை வாசித்திட
நானுனை யாசித்திட
என் உயிராய் உன்னை சுவாசித்திட

யாசகம் கேட்பவனானேன்
உன் மௌனங்களை மொழி பெயர்த்து
புது கவிகள் வரைந்திடுவேன்
உயிரே என்னில் உறவாக வந்திடு!

**றிம்ஸா டீன்**

# விடைபெறும் உயிர்

நலமாக நலத்தோடு வாழ்கையிலே
நாலு பேருடன் நல்ல முறையில்
பழகிடு மனமே...

உறக்கத்தில் இனி விழி திறப்பது நிஜமில்லை
நாளை என்ற நாள் மீது நம்பிக்கையில்லை
அடுத்த நிமிடமும் எமதில்லை மனமே...

கோடி சொத்தும் பயனில்லை
கூட வர துணையுயில்லை
மாடி வீடும் வருவதில்லை
மரணம் உண்மையே மனமே...
உற்ற உறவு வீடு வரை
பெற்ற உறவு பாதி வரை
பெற்றெடுத்த உறவு பாடை வரை

வாங்கி வைத்த வாகனம் அழுதிடுமா
சேர்த்து வைத்த சொத்துக் கூட வருமா
இறுதிப் பயணம் தனியே பயணிப்போம்
உறுதி கொள் மனமே...

பட்டம் பதவி பல வகித்தாலும்
பெயருக்கு பின் பல எழுத்துக்கள் சேர்ந்தாலும்
ஆண்டு அனுபவித்த ஆடம்பரம்
வாழ்க்கை என்றாலும்
மூச்சு நின்றால் யாவரும் கட்டைதான்
இங்கே பேச்சு நின்றுவிட்டால்
பிணம் தான் மனமே...

இறக்கும் நாள்
தெரிவதில்லை யாருக்கும்
இருக்கும் வரை நல்ல முறையில்
வாழ்ந்திடுவோம்
இறந்த பின்னும் நாலுபேர் மனதில்
காலம் முழுதும் வாழும்
எம் நல்லுள்ளம் மனமே ...

# வான் மேகம்

மேகமே மேகமே
நீலவானின் நிலம் நடுவே
நிலையில்லாமல் நீண்டு ஓடும்
வெண்மை நிற மேகமே

தாகம் கொண்டேன் உன்னாலே
மோகம் கொண்டேன் அதனாலே
உன் ஊடல் இங்கு மின்னலானதே
என் தேடல் மின் மினி ஆனதே
உன் பஞ்சுக் கூட்டத்தில் தொலைந்தே போனேன்

மழைத் துறல்களில் மீண்டு வந்தேன்
சிந்தும் துளியாக மண்ணில் விழும் நீர் துளியே
உருமாற்றம் செய்தாயே மழையாக
பூமியெங்கும் பன்னீரால் பொழிய வைத்தாயே

அசைந்து ஓடும் கூட்டமே
இசைபாடி என்னை அழைத்தாய்
உன் அசைவுக்கும் இசைவுக்கும்
நடுவில் இம்சைகள் செய்தாய்
இன்ப மாரி பொழிந்தாய்
விவசாயிகள் இன்பமுற செய்தாய்

# விவாகரத்தான விவகாரம்

புரிதல்கள் இல்லாத பிரிதல்கள்
உங்களில் உருவாகியதால்
என் வாழ்வில் புயல் அடித்துச் சென்றதே

சிந்திக்கவில்லை சிதைந்துப் போவது
என் எதிர்காலமென
சின்ன மனம் தவிப்பதை
அறியவில்லையா?

பிரிந்த இரு திசைக்கும்
சிறப்பாக வேறு பாதைகள் தெரிய
நான் மட்டும் தனித்து பயணித்தேன்
நீங்கள் அழைத்து வந்த பாதையில்

உங்களின் விவாகரத்து
என் மகிழ்ச்சியையும் சேர்த்து
ரத்து செய்ததே

நீங்க வேறு ஒருவருக்கு திருமதி
இவர் வேறு ஒருவருக்கு திரு நான்?

என்னிலைதான் என்னவென்று
சொல்லிவிட்டுச் செல்லுங்கள்

வராம் முழுதும் ஒரு இடமும்
வாராம் கடைசில் வேறிடமும்
நான் நிலவா இரவில் தோன்றி
பகலில் மறைய

உங்கள் உதாசீனத்திற்கு
என்னுணர்வுகளைச் சிறைப்படுத்தி
வைப்பது சரிதானா?

என் பாதைகளைப் பாழ்படுத்தி
நீங்கள் புதுப்பயணம் செய்வது குற்றமில்லையா?
நான் பாவமாகத் தெரியவில்லையா?
கரடு முரடனா தனிவழிப்பயணம் எனதானதே...

# இழந்த பாசம்

விரல் பிடித்து நடை பழக்கிடவில்லை
நான் போகும் பாதைகளில் துணை வரவில்லை

என் வாழ்க்கை பயணம் எதுவென காண்பிக்கவில்லை
உன் கைகளால் ஒரு வாய் சோறு உண்டதில்லை
நீ ஊட்டியதுமில்லை

சொல்லி அழ நீ அருகில் இல்லை
என் சோகம் நீ தீர்க்கவில்லை
என் மனம் என்னவென்று அறியவில்லை

எனக்கென்ன பிடிக்குமென நீ அறியவில்லை
என்னை அரவணைக்க உன் கரம் நீண்டதில்லை

ஒரு நாளும் தண்டித்ததுமில்லை
கண்டித்ததுமில்லை கட்டியணைத்துக் கொண்டதுமில்லை

எனக்காக அழகான உடைகள் தேர்ந்தெடுக்கவில்லை
எனை பள்ளிக்கூடம் கூட்டிச் செல்லவில்லை
என் படிப்பில் நீ அக்கறை காட்டவில்லை

பருவம் வரும் வயதில் தாவணி தர நீயில்லை
பக்குவமாக நாலு வார்த்தை உபதேசித்ததுமில்லை

திருமண வயதை நீயறியவில்லை
மாப்பிள்ளை பார்க்க நீ வரவுமில்லை
ஏன் என் மணப்பந்தலுக்கும்நீ வரவில்லை

இருந்தும் என்னிதயம் உன்னைத்தான் தேடுகின்றதே

**ரிம்ஸா டீன்**

பெயருக்கு பின்னே வந்த உன் பெயர்
பெயரளவில் மட்டுமே இருக்கும் படி செய்தாய் ஏன்?

இவளின் பிஞ்சு நெஞ்சம் புரியவில்லையா
வயதுபோயும், நான் தாயான பின்னும்
இன்னும் ஒரு நாளேனும் நான் உன்
அன்பையும் அரவணைப்பையும் பாசத்தையும்
அனுபவிக்கவில்லையே...

வாப்பா மகளை மறந்து போனார்!
மகளுக்கு மனதுண்டு என்பதனை
மறந்தும் போனார்!

# மழையோடு சில மணித்துளிகள்

ஏதிர்பாராத பயணம்
வானம் எனைப் பார்த்து நகைத்தது
நான் வெளியே வந்தால் தானாம்
மழையே வருதாம்

மழைத் தூறல்கள் எனைத் தழுவிச் செல்ல
தென்றல் எனை வருடிச் செல்ல
தேகம் சிலிர்த்துப் போனதே

பல வண்ண பூக்களைப் போல்
ஆங்காங்கே விரிந்து கிடக்கின்றன குடைகள்
அதை பிடித்துச் செல்பவர் முகம் ஏனோ
வாடிப்போயிருந்தன!

பாதையெங்கும் நீர் வழிய
அதை தட்டிச் சென்றது என்கால்கள்
குடையிருந்தும் நனைந்தேன்
குளிர்வதாக உணர்ந்தேன்
குறும்பாய் விளையாடினேன்
குழந்தையாக மாறிப்போனேன்
குதூகலத்துடன் பயணித்தேன்
வீடு வந்ததும் ஒரு கோப்பை
தேநீருடன் முற்றுப் பெற்றது
முடிவில்லாப் பொழுது!

# விடியல் காணாத விட்டில்

மலரிலும் மென்மை
மனம் கொண்ட மங்கை இவள்
மொழியிருந்தும் ஊமையானாள்

இதழ் திறக்க வழியிருந்தும்
விதி வரைந்த பாதையினில்
தனியே பயணித்தாள்
தான் கொண்ட மொழியாவும் மறந்துப் போனாள்

வண்ணக்கனவுகள் யாவையும்
அடுப்பறை அஞ்சறைப் பெட்டியில்
அடைத்து வைத்தாள்
பின் நாட்களில் அடக்கியும் வைத்தாள்
பாவம் இவள் எதிர்பாராத பட்டமளிப்பு
விழா கண்ட ஏமாளிப் பட்டதாரி!

இவள் பெற்ற பதவி இல்லத்தரசி குடும்பத்தலைவி!

அடுத்தடுத்து உயர் பதவிகளையும் வகுத்தாள்
நல்ல சமையல்காரி சுத்திகரிப்பாள்
சிலநேரம் தாதியாக ஆலோசனையாளாக
என நீளும் இவள் பட்டியல்

சம்பளமென்றால் பகிர்ந்த பின்
மிகுதியான உணவும்
நோய்வந்தால் மருந்தும்
வருடம் ஒரு முறை புத்தாடையும்
எதையும் புன்னகையுடன் ஏற்பாள் இந்த இளவரசி

மனம் விட்டு மாநாடு கூட்டுவாள் தவறாமல்

அகப்பையும் சட்டியும்
கீரையும் தக்காளியும்
வெள்ளைப் பூண்டும் கூடியிருப்பர்
சொன்ன கதை திரும்ப
திரும்ப கேட்டு
ஊமையாகிவிடும் அவையாவும்

ஏனோ இவளைப்பற்றி
இவளே யோசிப்பதில்லை
அவளின் எண்ணத்தில்
இருப்பதெல்லாம் எரிவாயு
இன்றா நாளையா தீர்ந்து போகும்
மின்சாரப்பட்டியல் எப்போது வரும்
காய் கறி விலைமாறுமா
என்பதாகவே இருக்கும்

இனி இவளின் விடியலும்
அஸ்த மனமும்
இன்னொரு உயர்திணை
அஃறினப் பற்றியானதே

ஏனென்றால் பெண் என்பவள்
பன்மையைப் பற்றி நினைக்கும்
செயற்பாட்டுக் குணம் கொண்டவள்!

## வாழ்க்கையின் யதார்த்தம்

எல்லோருக்கும் பிடித்தமாதிரியான
வாழ்வு அமைவதில்லை

அமைந்த வாழ்வைப் பிடித்தமாதிரி
மாற்றி வாழ்வதே தனிச் சிறப்பு

விரும்பியது கிடைக்கவில்லையென
கவலைக் கொள்ளலாகாது

எமக்குண்டானதைப் படைத்தவன் தருவான்
என்ற நம்பிக்கை வேண்டும் நமக்கு
இன்பம் துன்பம் கலந்த கலவை தான்
வாழ்க்கை என்பது உண்மை

இதில் ஒன்றை மட்டுமே நிரந்தரமாக
தந்திருந்தால் உலக வாழ்வு
கண்காட்சிப் பொருளாய் மாறிவிட்டிருக்கும்

இந்த உலகினில் எதுவும் நிரந்தரமில்லை
இதை அறிந்த புத்திசாலி
எது வந்தாலும் மகிழ்ந்திட மாட்டான்
எது போனாலும் கவலைப்படவும் மாட்டான்

# அந்த மூன்று நாட்கள்

வேதனை தரும் மூன்று நாட்கள்
மனம் விட்டு ஒரு மனு தர வந்தேன்
மாதர்கள் சார்பில்

ஆடவர்கள் அறியட்டும்
அழகான பெண்ணின் ஆழ்மனம்

மங்கையர் வாழ்வில்
மறந்திடாமல் வந்து துன்பம் தரும்
அழையாத விருந்தாளி

உடல் அலுப்பும் கூடவே
மன உளைச்சல்களை
பரிசாக சுமந்து வரும்

சொல்லிட இயலாது இன்னல்கள்
சொன்னாலும் புரியாது துன்பங்கள்
வலியின் வேகம் உணர்ந்தால் தானே உறைக்கும்

வலிக்கு ஒதுங்கி ஓய்வு கொள்ள
தேவை ஒரு நேரம்
அதுவே, வலி நிவாரணியாக
மாறும் சில நேரம்

உடலோடு உள்ளத்துக்கும்
தேவை ஒரு லீவு
ஓயாமல் உழைத்தாள்
ஓடாக தேய்ந்திட்டாள்
உதிரம்போகும் போது
உலகமே வெறுத்தாள் மாது

**ரிம்ஸா டீன்**

உண்ண மனமில்லாது
உறங்க நினைத்தாள்
உங்கள் கருணையும் பரிவும் போதும்
இவளுக்கு அதுவே மருந்தாகும் பலநேரம்

வலியில் பங்கெடுக்க வேண்டாம்
உங்கள் வேலைகளை முடித்திட பங்கெடுங்கள்

பாவமென மூன்று நாட்களாவது நினையுங்கள்.

# துளிகள் தூறலானதே

துளியாகத் தொடங்கியப் பயணத்தில்
தனியாக வாழ்ந்திடத் துணிவில்லையா

உலகை வென்றிட இறைவன்
துணை நிற்பான் நீ துணிவு கொண்டால்

தனியாகவே பிறந்தோம்
தனியாகவே மரணிப்போம்
இடையில் உன் வேலைகளை
செய்து முடிக்க தரகர்கள் எதற்கு

சிறு துளிகள் துறல்களாலான
அணைகட்டுக்களையும் உடைத்தெறியும்
வீரியம் உருவாகும்

பல இலட்சம் துணுக்குகளில்
ஒரு துளி இந்திரியம்தான் கருவை உருவாக்கும்

சிறு சிறு நெல் மணிகள்தான்
ஒருபானைச் சோறாகும்

மண்ணில் விழுந்த துளிகள் தான்
ஒருநாள் வைரமாக உருமாறும்
மனதில் விழுந்த துளிர்தான் காதலாக மாறிவிடும்

சிறியதென இழிவு கொள்ளாமல்
சிறியதானாலும் சிறப்பாக வாழ்ந்தால்
பல மனதில் நாம் மறக்காமல் வாழ்வோம்

கடுகு சிறிதானாலும் காரம் பெரிதல்லவா?

**ரிம்ஸா டீன்**

## சிறகின்றிப் பறப்போம் வா தோழா

எல்லைக்கான வானவெளியில்
காற்றுத் தடைகளையும் தகர்த்திடுவோம் தோழா

நம்பிக்கை என்னும் சிறகுகள் கொண்டே
உயரப் பறப்போம்
உலகை அளப்போம் தோழா

துணிந்தால் மலைகள் கூட தூசுதான்
துணிவிழந்தால் கல்கண்டும் கருங்கல் தான்

முடியாதென ஏதுண்டு
முயலும் வெல்லும்
ஆமையும் வெல்லும்
முயலாமை வெல்லாது

முயற்சி செய்வோர்
இகழ்ந்து வாழ்ந்திட மாட்டார்
தடைகள் உடைப்பதற்கே
தோல்வியை ஏற்றுக்கொள்
வெற்றிகள் துணை வரும்

மனமே மூலதனம்
செயலே முதலீடு
எண்ணமே காப்பீடு
இனியெதற்கு வீண் கோட்பாடு

வியர்க்கும் உடலிருக்க
உண்மையில் உழைப்பிருக்க
புன்னகை முகமிருக்க
நல்லதை நினைக்கும் உள்ளமிருக்க

எழுந்து நில்
நிலவையும் தொடலாம்
வானையும் வளைத்திடலாம்
கடலையும் கடந்திடலாம்
துவண்டு விடாதே

இரை தேடும் பறவையாய்
எம் வழித்தேடி
சிறகின்றிப் பறப்போம் வா
சிறப்பாய் வாழ்வோம் வா தோழா

# அழகே அழகு எதுவும் அழகே

அதிகாலை மலரின்
மீது படர்ந்துள்ள
பனித்துளி அழகு

அதைக் கொலை செய்யும்
விடியலின் வெயில் அழகு

மாலை வேளை மஞ்சள்
வெயிலழகு
மார்போடு அணைத்து பால்
தரும் தாய் அழகு
விரல் பிடித்து நடை பழக்கும்
தந்தை அழகு

பாய்ந்தோடும் நதி அழகு
பயமில்லாமல் அங்கே வாழும்
மீன் அழகு

மனதுக்கு இதமான பாடல் அழகு
பள்ளிப் பருவத்தில் சொல்லாமல்
வரும் காதல் அழகு
சொல்லிப் பிரியும்
தருணம் நினைத்துப்
பார்க்க அழகு

பறந்து திரியும் பட்டாம்
பூச்சியின் நிறமழகு
பாலைவனத்தில் வெயில் வெப்பம் அழகு
வாழும் வரை குழந்தை
உள்ளம் அழகு

வாழ்க்கையில் இன்பம் துன்பம் அழகு
கூடி வாழ்வது கோடியழகு

என்றும் வெண்மை உள்ளம்
என்றென்றும் அழகு
பொய் பேசாத உதடு அழகு
நல்லதை எண்ணும்
இதயம் அழகு
மழலைகள் வாழும்
இல்லம் அழகு
இறைவன் படைப்பில்
எதில் இல்லை அழகு

எண்ணம் அழகானால்
வாழ்க்கை அமிர்தமாகும்
இது எனது மொழி பொன்மொழியாய்!

## கருவறைப் பூக்கள்

அம்மா என்னும் அற்புதமான சொல்லுக்காக
அனைத்தும் இழக்கலாம்

நான் கொண்ட பல மணி வேதனைகளும்
தூசாகப் பறந்துப் போனதே
உந்தன் பிஞ்சுக் கால்கள் கண்டவுடன்

கருவறைக்கு கருவாகி கருவுக்குள் உயிராகி
என்னில் உதயமான முத்து நீயல்லவா

என் பெண்மைக்கு தாய்மை சேர்த்த
உறவு நீதானே கண்மணி

வாழ்வை முழுமையாக்கிய மழலை நீயே
பாலை வனத்தை பூஞ்சோலை வனமாக்கிய பூங்கொத்தே

தாய் என்னும் தவம்
இருந்தும் அடைய முடியாத சிம்மாசனம்
எனக்களித்த தேவதை நீயல்லவா

இறைவன் தந்த அருட்கொடையினிலே
உனக்கேது ஈடு இணை
உன்னைத் தொட்டுத் தழுவும் போதே
என்னையறியாமல்
என் மார்பில் தாய்ப் பால் பீறிட்டு
பாய்ந்தோடுவதும் ஏனோ

கண்ணே கனியமுதே உன்னை
பிரசவித்து பத்தாண்டுகள் ஆன பின்னும்
என் வயிற்றில் நீ உதைப்பதுபோல் பிரமை ஏனம்மா

# அகதி

நாடுவிட்டு நாடு நகர்ந்தோம்
கடல் அலைகளுக்குள் செத்துப் பிழைத்தோம்

சூறாவளிகளையும் கடந்தே வந்தோம்
சொந்தவூரில் உரிமையிழந்து
சொந்த பந்தம் சொத்து செல்வம்
துறந்தே பயணமானோம்

உயிரை மட்டும் கையில் பிடித்து
உணர்வுகள் துடிக்க துடிக்க விட்டு
வந்தோம் பிணங்களாக

முள்வேலிக்குள் சிக்குண்டோம்
முகாம்களிலே சிறைப்பட்டோம்

எமதான அடையாளங்கள் அழிக்கப்பட்டதே

அடிமை எம்மில் விதைக்கப்பட்டதே
அநியாயம் இழைக்கப்பட்டதே

உயிர் பிழைத்தால் போதுமேயென
அங்கீகாரம் நாடி வாழ வழிதேடி வந்தோம்
கண்டம் தாண்டி காவல் நாடி வந்தோம்

வந்து தஞ்சமான இடம்
எமக்களித்த சின்னம் அகதி

## வாழமறந்த மனிதம்

மனிதா... வாழ்வில் வறுமை கண்டு அஞ்சலாம் - அந்த
வறுமையிலும் செழுமையாக வாழ்ந்து விஞ்சலாம் !

சிறப்பாக வாழ நினைத்தல் நன்று
சிந்தித்து சீராகவாழ மறத்தல் நன்றோ ?
வசதியாக வாழ நினைத்தும்
வசந்தமாக வாழ மறுத்தால்
வாழ்வில் வீணே மிஞ்சும்.
ஆடம்பர வாழ்வை தவிர்த்து
அனைவரிடத்தும் அன்பாக பழகு. !

பட்டம் பதவிகளோடு வாழ்ந்தும்
உற்ற உறவுகளைப் பிரிந்தே
அறியாமையெனும் வலையில் வீழ்ந்து
தேவைக்கு அதிகமான தேவைகளின் பின்னே
ஓடி ஓடியே உள்ளம் தேய்ந்து போகவேண்டாம்.

பகட்டுக்காக வாழ்ந்து நாளும்
தனக்கான வாழ்வை மறக்காதே

உனக்குள் மேடையேற்றி நடிகனாக வேண்டாம்
நல்வாழ்க்கை பயணத்தை நடித்தே தொலைத்திட வேண்டாம்
உனக்கே மாறுசெய்யும் இந்த வேடமும் தேவைதானா ?

வாழ்க்கையென்பது பகட்டும் பணமுமல்லவே
மனம் கொண்டே வாழ்வில் சிறந்திடு !

## புதுப் பணக்காரன்

தொலைந்து போகின்றது மனிதம்
மனம் மறந்துபோனதே மனித நேயம்
அறிந்து போனதே அனுபவம்
அழிந்து போனதே அறிவு

பணம் பத்தும் செய்தது
பாசத்திற்கு ஒன்றும் செய்யத் தவறியது

கேட்டுப் பெறுவது பிச்சை
உதடு கேட்காமல் உதவுவதே உயர்வு
இதை நீயறிய உன் அனுபவம் காணாது
நீ புதுப்பணக்காரன் தானே

புகழ் கிடைக்க வாரி வழங்கிடும் வள்ளல் நீ
அதைப் பெற வரிசையில் நிற்க
நீ கடவுளா? நான் பக்தனா?

உனை ப்டைத்தவனே
என்னையும் படைத்தான்
உனக்களித்தவன்
எனக்களிக்காமல் போவானா?

பணத்திற்கு நீ தொலைந்து போனால்
என் குணத்தால் தேடிப் பெறுவேன்

இல்லை என்று வருவோர்க்கு
உதவாத உன் சொத்து
இருந்தும் பயனில்லை!

# ஒற்றுமையோ பலம்

ஒற்றுமையே பலம்
அதுதருமே எதிரிக்குப் பலவீனம்
இணைந்த கைகள் இரும்பைவிட திடமானது
இதையறியாமலே தோல்விகள் வானுயர்ந்தது.

நாம் மட்டும் வாழவந்தோம் என்றே எண்ணலாகாது
பலர் வாழ வழியாக்கி துணை செய்ய வேண்டும்.
ஒன்றுபட்டால் ஆயுதமும் அழிந்து போகும்.

ஊரிரண்டு பட்டால் தானே கூத்தாடிக்கு கொண்டாட்டம்
அறிவில் இதை கொண்டிட ஏனடா இத்தனை திண்டாட்டம்

மொழி இனம் மதம் வேறாகினும்
மனிதன் என்னும் பதத்தில் நாம் ஒன்றே

வேட்டையாடும் சிங்கம் கூட தனித்திருக்கும்
இரையைத்தான் தாவிப்பிடிக்கும்

படையுடன் நாம் கூடியிருக்கப்
பின்னோக்கிப் பயணிக்கும்
எதிரியின் போர் எண்ணம் கூட
கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்ற
பெரியோர்கள் வாக்கு பொய்யல்லவே?

# நாடு செழிப்புற

நாடு செழிப்புற மரங்கள் வேண்டும்
காடுகள் அழித்த காலங்கள் இனி வேண்டாம்
வெயிலினால் கண்ட கொடை போதுமே

மழைகள் வரமறுக்குதே மரங்களில்லாமல்
விவசாயமும் மந்த கதியில் மழையில்லாமல்

நதியோடைகளை வற்றிட வைத்தே
நாகரீகம் வளர்த்தென்ன இலாபம்
இயற்கை அழித்து செயற்கை உருவாக்கி
கண்ட பலனென்ன?

எழில்மிகுந்த பசுமையிலுள்ள கண்குளிர்ச்சி
காணாமல் போய்விட்டால்
எதிர்காலமென்பதை விளக்கு வைத்தே
தேடினாலும் கிடைக்காதே

நாம் கொண்டு வந்தது ஒன்றுமில்லை நல்ல
கன்றுகளை நட்டு விட்டுப் போவோம்!
நம் சந்ததிகள் வளம் பெற
சூழல் காப்போம் சுகமாய் வாழ்வோம்!

# தூக்கிலிட்ட நாக்கு

பல்லாக்கும் ஏறிடலாம்
படுகுழியிலும் வீழ்ந்திடலாம்
நரம்பற்ற நாக்கின் இசைவாக்கத்தினால்

இடம் பொருள் ஏவல் அறிந்தே
மொழி வீசுவது சகலச் சிறந்து

அரிசி மணிகளல்லவே
வார்த்தைதனை உதிர்த்திட்டால் அள்ளியெடுக்க

சில பல சரித்திரங்கள் வீழ்ந்த கதையுண்டு
தரித்திரம் பிடித்த பேச்சினால்
கடுகு சிறிதானாலும் காரம் பெரிதல்லவா

மனதில் தோன்றும் எண்ணமெல்லாம்
வார்த்தையாக வெளிவர வேண்டும் என்றில்லை

கெட்டதை பேசும் வார்த்தைகளைவிட
பேசிடாத மௌனங்களுக்கு ஆயுள் அதிகமே

உள்ளம் சொல்லும் செய்திகளை
ஓராயிரம் முறை சிந்தித்து சிந்திவிட்டால்
கேட்கும் இதயங்களை காயப்படாமல் காத்திடலாம்
கல்லினால் அடித்த காயம் மாறும்
சொல்லினால் சுட்ட வடு மாறாதே!

## பனிமலர்

விடியலின் இராக்கால பிரசவக் குழந்தை
மலர்களின் மேல் ஆங்கங்கே மயக்கத்தில்
சிதறிக்கிடக்கும் அழகே அழகு

இதழ்களில் மேல் ஓய்யாரமய் அமர்ந்துள்ளாய்
பருவமடைந்த குமரியைப்போலவே

சூரியக்கதிர் வந்தவுடனே ஓடி ஒழிகின்றாய்
யாரும் உனை பெண்கேட்டே வருவார் என்ற அஞ்சத்திலே

பூக்கள் அழகு தான்
விடியலில் அதற்கு போர்வையாக நீயும்
அமரும் போதே தனியழகு

# உள்ளக்குமுறல்

ஆழப்புதைந்த இன்பம் கடலாழத்தில்
புதையுண்ட முத்துக்களாகமூழ்கிப்போனதே
இனியிங்கே முத்தெடுக்க நதியில்லை

வறுமையின் விளிம்பில்
வசதியானவர்கள் தொலைந்தே போனார்கள்
உறவுகளின் உதவிகள் அற்று

சுமைகளைச் சொல்லியழ சொந்தமில்லை
அவரவர் சோகங்கள் அவரவரோடு

அன்புகள் மறக்கப்பட்ட உலகினிலே
உள்ளங்கள் உலாவிக் கொண்டிருக்கையிலே
யாரிடம் யார்போய் துன்பம் தீர்ப்பது

பசியென வழிப்போக்கன் கேட்க தர
அமிர்தமில்லை பணம் படைத்த வீட்டிலே
பாத்திரத்திலா? உள்ளத்திலா? இல்லையெனப்
எனக்கெதுவும் புரியவில்லை!

குப்பைகள் நிறைக்கும் உணவை
மனித வயிறை நிறைக்க கொடுத்துதவாத வையகமிது
ஆற்றமுடியவில்லை இதயங்களில் வலிதாங்கவில்லை
உண்மைகள் நிராகரிக்கப்படுமே என
உள்ளக்குமுறல்கள் ஒளியெழுப்பினாலும்
கிணற்றுத்தவளையாகிப்போனதே எம் நியாயங்கள்.

நாகரிகத்தின் உலகினிலே மனித நேயம்
மருந்துக்கும் இல்லை என நினைக்கையில்
நிர்க்கதியாகும் மனிதம் என்னும் புனிதம்!

## குடையா குட்டையா

மழைநாளில் மறந்திடாமல் அதிகம் மலரும் மலரிது
வண்ண வண்ண நிறங்கள் கொண்ட வாடா மலரிது
பலவர்ணம் கொண்டாலும் கருப்புக்கு இங்கே தனி மதிப்பு

மாரியின் துளிகளுக்கு பயந்தே குடைக்குள்
ஒழிந்திருப்பது தூறல்களை தவிர்த்திடவே

கடற்கரையினிலே இருவருக்குள் ஒருவராய்
மற்றவர் பார்வைவிட்டு ஒதுங்கிக் கொள்வது
குடைக்குள் கூடல் கொள்வதற்கே
அது அவசியம் இது அனாவசியம்!

## முதல் கறை

பட்டாம் பூச்சி பிடித்து
பக்குவமாய் பறந்து திரிந்த வயது
பள்ளிச் செல்லும் பருவம்
பல வண்ண விளையாட்டு விளையாடி
ஆடலும் பாடலுமாக அசத்திய வயதிது

ஆண் பெண்ணென்ற பால் உணராத வயதிது

யௌவனப் பருவம் எட்டிப் பார்க்கும் வயதிது
பருவம் எய்தும் துருவமிது

சிறுபிள்ளை உள்ளத்தோடு
கவலைகளறியா கனாக்கண்ட வயதிது

வந்ததே முற்றுப்புள்ளியாக கறையொன்று

திடீர் ஈரலிப்பில் உடல் அலுப்போடு
அடிவயிறு வலியெடு க்க ஒரு கறையைக் கண்டேன்

இந்த கறையே ஓர் தொடர் கதையாகும் என
அறிந்திருக்கவில்லை அந்நாளில்

நானே நடுக்கம் கலக்கம் பதற்றத்துடன்
அம்மாவிடம் கூற, அவளோ புன்சிரிப்போடு
என்னை நெற்றிமுகர்ந்து அணைத்துக்கொண்டாள்

அன்றுமுதல் என் சிறு பிள்ளைப் பருவம் முற்றுப்பெற்றதே!



# ரிம்ஸா டீன்

''பேச்சில் தேனும்
நாக்கிலே நச்சும்
பார்வைக்குப் பாலும்
பருகினால் கள்ளுமான
மனிதப் புனிதர்களை
வாசிக்கப் புறப்படுகின்றேன்''

இப்படி மனிதப்புனிதர்களைப் படிக்கத்துவங்கும் கவிதாயினி ரிம்ஸா டீனின் கவிதைகளை நானும் படிக்கிறேன். அதில் மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

இவர் வாழ்வின் வலிகளை உன்னத கவிதைகளாக்கி நம் முன்னேப் படையலாக்கியிருக்கின்றார். மேலும், இவருடைய கவிதைகள் சமூகத்தின் அவலங்களைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

என் அகராதியில்
அன்புக்கும் அரவணைப்புக்கும் நம்பிக்கைக்கும்
இன்னோர் மொழி தேடுகின்றேன்!

தேடலில் முடிவாக
புது மொழி கிடைத்தால்
நானும் எழுதி முடித்திடுவேன்
புதுக்கவிதைகளை...

இப்படியான தேடலிலேயே தனது கவிதைகளை மொழிப்பெயர்க்க முனைந்திருக்கிறார். எளிய முறையில் இனிய நடையில் செல்கிறது கவிதைகள் நூல் முழுதும்.

**தமிழ்நெஞ்சம் அமின்**
ஆசிரியர் 'தமிழ்நெஞ்சம்', பிரான்சு

முகப்போவியம் தமிழ்நெஞ்சம் அமின்

ISBN : 978-955-71248-0-3

9 789557 124803